# கச்சதீவு யாத்திரீகர்கள் 100 பேர் தடுக்கப்பட்டனர்

Registered as a News pape in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு

EELANADU

மலர் 11
இதழ்: 33
தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும் தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் பங்குனி 2 ஜுஹஜ்: 25 சனிக்கிழமை [15-3-69

# பன்றித்தலைச்சி ஆலய விவகாரம் நீதிமன்றம் செல்கிறது

## அரசாங்க அதிபர் - பரிபாலகர்கள் மகாநாட்டில் அறிவிப்பு

— நமது சிறப்பு நிருபர் —

யாழ்ப்பாணம், சனி

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான முடிவை நீதிமன்றத்திடம் விடுவதென ஆலய பரிபாலகர் குழு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. பிரான்ஸிஸ் பீட்டர்ஸிடம் தெரிவித்தது.

அரசாங்க அதிபர் திரு பீட்டர்ஸ் தலைமையில் கோவில் பரிபாலகர்களான திருவாளர்கள் எஸ். செல்லத்துரை, எஸ். சிவகுரு, குழந்தைவேல் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் யாழ். அரசாங்கச் செயலகத்தில் கூடிய போதே மேற்படி முடிவு செய்யப்பட்டது.

இம்மாநாட்டில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. ரி. முருகேசம்பிள்ளையும் கலந்து கொண்டார். கோவில் பரிபாலகர்கள் இந்த முடிவை அரசாங்க அதிபரிடம் தெரிவித்தனர்...

...மாக அபிப்பிராயபேதம் இருப்பதால் இது விஷயத்தில் என்ன விதமாக தாங்கள் நடக்கவேண்டும் என்பதை கட்டளைபண்ணும்படி வழக்குதாக்கல் செய்யப்படும். இந்தமுடிவு ஆலயப் பரிபாலன திட்டத்தின்படி எடுக்கப்படவேண்டுமென கேட்டுக்கொள்ளப்படும்.

### அனைவரும் வெளியில்

நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை அனைவரும் கோயிலின் வெளிவீதியில் நின்றே வணங்கவேண்டும். திருவிழாக்கள்

## 4 மணிநேர மின்சாரவெட்டு
### இன்றுமுதல் அமுல்

கொழும்பு, வெள்ளி

நாளையிலிருந்து நாடு பூராவும் 4 மணித்தியால மின்சார வெட்டு அமுலுக்கு வருவதாக மின்சார இலாகா அறிவித்தது. காசில்றீ பகுதியில் மழையின்மையால் ஏற்பட்டுள்ள அதிக வரட்சியே இதற்குக் காரணமெனக் கூறப்பட்டது.

மின்சார வெட்டு அமுலுக்கு வருவதால் மின்சார



பக்திக்குப் பயமேது. இதோ ஒரு பெண்மணி வள்ளமொன்றிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கிறார்...

# வடக்கு கரையில் 'கஜபாகு'

— நமது நிருபர் ஏ. தேவராசா —

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று கச்சதீவுக்கு செல்லப்புறப்பட்ட சுமார் 100 பேர் அவ்விடம் செல்லமுடியாது தடுத்து நிறுத்தப்பட்டனர். பிற்பகல் 2 மணிக்கு பின் இங்கிருந்து யாரும் செல்ல அனுமதிக்கப்படாததாலேயே இவ்வாறு இவர்கள் செல்லமுடியாது போயிற்று. நேற்றுக்காலை குருநகர் துறைமுகத்திலிருந்து சுமார் 14 படகுகளில் கச்சதீவுக்கு யாத்திரீகர்கள் சென்றனர்.

### கடற்படை கப்பல்

கச்சதீவு திருநாளை முன்னிட்டு கள்ளக்கடத்தல், சட்டவிரோத குடியேற்றம் நடைபெறுது தடைசெய்வதன் நோக்குடன் இலங்கை கடற்படைக் கப்பலான 'கஜபாகு' நேற்று காங்கேசன்துறை துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது. நேற்று கடற்படை அதிகாரிகளுடன் இராணுவ அதிகாரிகள் கள்ளக்கடத்தல் சட்டவிரோத குடியேற்றம் சம்பந்தமாக 'கஜயபாகு' கப்பலினுள் மகாநாடு ஒன்றைக் கூட்டியதாகத் தெரியவந்துள்ளது.

சென்ற வருடம் கச்சதீவு பெருநாளை அடுத்து இராணுவம், கடற்படை சுங்கப் பகுதியினர் தீவுப்பகுதி கடலில் ரோந்து புரிந்தபொழுது காங்கேசன்துறை தொடக்கம் பருத்தித்துறை வரை கள்ளக்கடத்தல்நடைபெற்றதாகவும் இம்முறை தடுப்பதற்குஇப்பகுதிக்கரைகளில் போதிய இராணுவ வீரரை இரவு பகலாக நிறுத்துவதாகவும் இம்மாநாட்டில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட்டது.

கஜபாகு கப்பலுடன் நான்கு கடற்படை இயந்திரப்படகுகளும் உதவிக்குநிற்குமென்றும் இதில் இராணுவமும், கடற்படையினரும் ஒன்றுபட்டுத் தீவிரமாக ரோந்து புரியுமெனவும் அறியப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பொலிசாரின்எண்ணிக்கையும் அதிகரிகப்பட்டுள்ளது. குருநாகலையிலிருந்து உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ஜெயரத் குருநகர் துறைமுகத்துக்கு வந்துள்ளார்.

இத்திருநாளையொட்டி இதுவரை எவ்வித சட்டமீறல் சம்பவங்களும் இங்கு இடம்பெறவில்லையென பொலிசார் தெரிவித்தனர்.


### தடுப்பு ஊசி

சென்ற வருடம் இங்கிருந்து செல்லும்போதுமட்டும்தான் நோய் தடுப்பு ஊசி போடப்பட்டது இம்முறை அங்கிருந்து வரும்போதும் தடுப்பு ஊசி போடப்படும்.

கச்ச தீவுக்கு இம்முறைபல சிங்கள யாத்திரிகர்களும் செல்லுகின்றனர்.

நாளை கூடு சுற்றலுடன் கச்சதீவு அந்தோனியார் தேவாலய திருநாள் பூர்த்திபெறும்.

இன்றும் பல யாத்திரிகர்கள்இங்கிருந்துகச்சதீவுக்குச் செல்ல இருக்கின்றனர்.



கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் ஒருபகுதி இவ்வாறு எளிமையாகத் தோற்றமளிக்கின்றது. இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்து புனித அந்தோனியாரைத் தரிசிக்கவந்துள்ள பக்தர்கள்ஆங்காங்கேகாணப்படுகின்றனர்.

# ஆலயபிரவேசத்தில் ஐக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்திக்குப் பயமேது. இதோ ஒரு பெண்மணி வள்ளமொன்றிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கிறார். கீழே தடியுடன் காணப்படும் ஒருவர் அந்தப் பெண்ணைத் தோளில் ஏந்திப் பிடித்து இறங்குவதற்கு உதவுகின்றார். வள்ளத்தில் சிறுவர்களுடன் பலர் இறங்குவதற்காகக் காத்திருக்கிறார்கள். —கச்சதீவுக் காட்சி

செயலகத்தில் கூடிய போதே மேற்படி முடிவு செய்யப்பட்டது.

இம்மாநாட்டில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ.ரி. முருகேசம்பிள்ளையும் கலந்து கொண்டார். கோவில் பரிபாலகர்கள் இந்த முடிவை அரசாங்க அதிபரிடம் தெரிவித்தனர்.

நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பின்படி தாம் நடந்து கொள்ளச் சித்தமாகவிருப்பதாகவும் கோவில் பரிபாலகர்கள் தெரிவித்தனர்.

### நாளை தாக்கலாகும்

இந்த வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நாளை தாக்கல் செய்யப்படும்.

### தாக்கல் செய்யப்பட இருக்கும் வழக்கு

அடியார்கள் மத்தியில் ஆலயப்பிரவேசம் சம்பந்த எடுக்கப்படவேண்டுமென கேட்டுக்கொள்ளப்படும்.

### அனைவரும் வெளியில்

நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை அனைவரும் கோயிலின் வெளிவீதியில் நின்றேவணங்கவேண்டும். திருவிழாக்கள் பூஜைகள் வழக்கம்போல் நடைபெறும்.

இத்திருவிழாக்கள் பூஜைகள் நடைபெறும்போது பூஜகர்களும் கோவில் தொண்டர்களும் மாத்திரமே உள்வீதிக்கு செல்வார்கள்.

கோவில் பொங்கலுக்கு வேண்டிய தீர்த்தம் தொண்டர் படையினரால் சகலருக்கும் வழங்கப்படும்.

சார வெட்டு அமுலுக்கு வருவதாக மின்சார இலாகா அறிவித்தது. காசில்றீ பகுதியில் மழையின்மையால் ஏற்பட்டுள்ள அதிக வரட்சியே இதற்குக் காரணமெனக் கூறப்பட்டது.

மின்சார வெட்டு அமுலுக்கு வருவதால் மின்சார உதவியினால் இயங்கும் தொழிற்சாலைகளில் அதிக நஷ்டமேற்படுமெனக் கருதப்படுகிறது. ஆஸ்பத்திரி தேவைகளுக்கு பிரத்தியேக சலுகைகள் வழங்கப்படும் நேற்று 2 மணி நேரம் மட்டுமே மின்சாரவெட்டு நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது

## பக்தர்கள் எண்ணிக்கை இந்த வருடம் அதிகம்

### கண்கொள்ளாக் காட்சி

**— கச்சதீவிலிருந்து நமது நிருபர் —**

யாழ்ப்பாணம், சனி

சென்றாண்டு இங்கு திரண்டு வந்த பக்தகோடிகளிலும் பார்க்க இவ்வாண்டு அதிகமானோர் புனித அந்தோனியார், தரிசனம் காண வந்து குவிந்து கொண்டேயிருக்கின்றனர்.

எத்தகைய வன்மையான கட்டுப்பாடுகளானாலும் மக்கள் பக்தியை முறியடிக்கவியலாது என்பதற்கு புனித அந்தோனியார் ஆலயம் நோக்கி வந்துகொண்டிருக்கும் பக்தகோடிகள் ஒரு எடுத்துக்காட்டாகும். கச்சதீவைச் சுற்றியுள்ள தீவுகளின் சகல கடற்கரையோரங்களிலும் அரசாங்கம் நாட்டின் சகல படைகளையும்உஷார் படுத்தியுள்ளபோதும் யாத்திரீகர்கள் ஆயிரக் கணக்கில் இங்கு வந்து சேர்ந்துகொண்டிருக்கின்றனர்.

### கண்கொள்ளாக் காட்சி

இந்தியா இலங்கை ஆகிய இரு கரைகளிலுமிருந்து பக்தர்களைச் சுமந்துகொண்டு படகுகள் வருவதும் அவர்கள் படகுகளில் இருந்தபடியே புனித அந்தோனியாரைக் கையெடுத்து வணங்குவதும் கச்சதீவுக் கரையில் நிற்கிறவர்களுக்கு கண்கொள்ளாக் காட்சியாகும். புதனன்று மாத்திரம் நாட்டின் சகல பாகங்களிலுமிருந்து 15 க்கும் மேலான படகுகளில் யாத்திரீகர்கள் வந்துசேர்ந்துள்ளனர்.

யாத்திரீகர்களோடு யாத்திரீகர்களாக பொருள்களை விற்பனைக்காகக் கடத்துவோரும்குறிப்பிட்ட சிலபொருட்களுடன் கச்சதீவில் வந்திறங்கியுள்ளதாக அறியப்படுகிறது. இலங்கையில் தயாராகும் சாராயம், விழாவின் போது இங்கு வர்த்தகர்களால் கொண்டுவந்து விற்கப்படுவதாகவும் பொலிசாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இவற்றைவிட வியாபாரிகள் 'ஹொர்லிக்ஸ்' கொட்லிவர் மாத்திரைகள், தேங்காய் எண்ணெய் போன்ற பல பொருட்களையும் கொண்டு வந்துள்ளனராம்.

இவ்வாறு பல நோக்கம் கொண்டு கச்சதீவை நோக்கி வரும் யாத்திரீகர்களின் எண்ணிக்கையை நோக்கும் போது எத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும் மக்கள் பக்தியைக் கட்டுப்படுத்த இயலாது என்பதைக் காட்டுகிறது.

## சகல தரப்பினரும் நாளை கூடுவர்

மேற்படி முடிவு சம்பந்தமாக கருத்துக்களைப் பெற்று இது விஷயத்தில் சுமுகமான தீர்வு காண்பதற்காக நாளை அரசாங்க செயலகத்தி ஆலயப்பரிபாலகர்கள் குழு, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் அரசாங்க அதிபர் தலைமையில் கூடவிருக்கின்றனர். பகல் 11 மணிக்குஇம்மகாநாடு நடைபெறவிருக்கிறது.

## பாக்.குக்கு சோவியத் டாங்கிகள்

புதுடில்லி, மார்ச் 14

பாகிஸ்தானுக்கு சோவியத் யூனியன் 40 டாங்கிகளைக் கொடுத்துஉதவியிருப்பதாக இன்று லோக்சபையில் தகவல் தெரிவிக்கப்பட்டது. ரஷ்ய பாதுகாப்பு மந்திரியுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது இத்தகவல் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக இந்திய பாதுகாப்பு மந்திரி தெரிவித்தார்.

## கோப்பாய் எம்.பி. ஆஸ்பத்திரியில்

வவனியா, வெள்ளி

வவனியா புகையிரத நிலையத்தில் நேற்று திடீரென மயக்கமுற்று விழுந்த கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை உடனடியாகவவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் நீதிமன்றத்துக்கு வழக்கொன்றுக்காகச் சென்று திரும்பிய போதே திரு. கதிரவேற்பிள்ளை வவனியா புகையிரத நிலையத்தில் இவ்விதம் மயக்கமுற்றதாகத் தெரிகின்றது.

## 'மட்டுவில் அம்மன் ஆலய பிரவேசத்தில் பங்குபற்றுவதில்லை'

### தென்மராட்சி சிறுபான்மை வாலிபர்கள் தீர்மானம்

மீசாலை, சனி

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவிலில் இம்மாதம் 17-ந் திகதி நடைபெறவிருக்கும் ஆலயப் பிரவேசத்தில் கலந்துகொள்வதில்லையென தென்மராட்சியைச் சேர்ந்த சிறுபான்மை இனவாலிபர்கள் ஏகமனதாக நேற்று தீர்மானித்துள்ளனர்.

மந்துவில் 'தியாகி' இரத்தினம் வாசிகசாலையில் திரு. த. யோகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மட்டுவில், சரசாலை, கொடிகாமம், அல்லாரை, மந்துவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் 200 சிறுபான்மைஇன வாலிபர்கள் கலந்துகொண்டனர்.

தலைவர் திரு. யோகராசா கூறியதாவது: சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள தீண்டாமைஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர், அரசியல் செல்வாக்கு தேடுவதற்கு, அரசியல் நோக்கங்கொண்டு, இந்த ஆலயப்பிரவேசத்தை நடத்துவதால், தென்மராட்சியில்வாழும் நாம் இதில் கலந்துகொள்ளக்கூடாது.

தீண்டாமை ஒழிப்பிற்கு பாடுபடும், தமிழ் எம். பிக்களையும், பிரமுகர்களையும், இந்துமாமன்ற ஆலயப்பிரவேச குழுவினரையும், அரசாங்க அதிகாரிகளையும், பொலிஸ் உத்தியோகத்தர்களையும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர். தங்கள் கூட்டங்களில் கண்டித்துப் பேசிவருகின்றனர். இதிலிருந்தே கட்சியின் வளர்ச்சி தான் அவர்களின் நோக்கம் என்பது தெளிவாகிறது. ஆண்டவன்மீது நம்பிக்கையில்லாத கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆலயப் பிரவேசத்திற்கு முயற்சிப்பது வேடிக்கையாக இருக்கிறது. ஆலயப் பிரவேசத்திலோ, தீண்டாமை ஒழிப்பிலோ இவர்களுக்கு எவ்வித அக்கறையும் இல்லை. ஆதலால் இவர்களின் போராட்டத்தில் நாம் கலந்து கொள்ளக் கூடாது.

## பரூக் மரைக்காயர் புதுச்சேரி முதலமைச்சர்

புதுச்சேரி, மார்ச் 14

புதுச்சேரி (பாண்டிச்சேரி) ராஜ்யத்தில் தி. மு. க. சட்டசபைக் குழுவின் தலைவராக திரு. பரூக் மரைக்காயர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார்.

திரு. மரைக்காயரை முதலமைச்சராகப் பதவி ஏற்கும்படி கவர்னர் திரு ஜட்டி. அழைத்திருப்பதாகவும் அறியப்படுகின்றது. திரு. மரைக்காயர் தமிழ் நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியுடனும் இதர தலைவர்களுடனும் கலந்தாலோசித்த பின்னர் தமது மந்திரிகளின் பெயர் பட்டியலை உருவாக்கியுள்ளார். இப்பெயர் பட்டியல் இன்று மாலையில் கவர்னரிடம் கையளிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## இத்தாலிய தூதுவர் காலமானார்

கொழும்பு, வெள்ளி

இத்தாலியில் இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் திரு. எச். டபிள்யூ. விஜயகோன் இத்தாலியில் இன்று காலமாகிவிட்டார். நேற்றுமுன் தினம் அங்கு நடைபெற்ற கார்-றக் விபத்தொன்றில் சிக்கி மரணமான விஜயகோன் (வயது 58) முன்னாள் இலங்கை இராணுவ தளபதியாகக் கடமையாற்றியவர்

விபத்துக்குள்ளாகிய இவரது மனைவியும், மகனும், மகனை விவாகம் செய்யவிருக்கும் செல்வி மல்லிகா விக்கிரம சிங்காவும் இத்தாலிய பெரிய மருத்துவ விடுதியில் சிகிச்சை பெறுகின்றனர். இவர்களது உயிருக்கு ஆபத்து இல்லையென தெரிவிக்கப்பட்டது.

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் ஒருபகுதி இவ்வாறு எளிமையாகத் தோற்றமளிக்கின்றது. இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்து புனித அந்தோனியாரைத் தரிசிக்கவந்துள்ள பக்தர்கள் ஆங்காங்கேகாணப்படுகின்றனர்.

# ஆலயபிரவேசத்தில் ஐக்கிய முன்னணி கலந்துகொள்ளாது

## அன்பு வழியில் ஆலயக் கதவுகளை திறந்து விடும்படி தலைவர் கோரிக்கை

(நமது அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணம், சனி

**மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் இம்மாதம் 17-ம் தேதி நடைபெறவிருக்கும் ஆலயப்பிரவேசத்தில் சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணி கலந்துகொள்ளாது என்று சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவரான திரு. எம். சி. சுப்பிரமணியம் நேற்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.**

திரு. எம். சி. சுப்பிரமணியம் மேலும் கூறியதாவது:

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக ஏற்கனவே சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியினர் ஒழுங்குகள் செய்துள்ளனர். ஆலயப்பிரவேசத்தினால் வரும் புகழ் முழுவதையும் தமது கட்சியே பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற கருத்துடன் அக்கட்சியினர் வேலைசெய்வதனால் அக்கட்சியினருடன் சேர்ந்து மட்டுவிலில் ஆலயப்பிரவேசம் செய்ய நாங்கள் விரும்பவில்லை.

மாவிட்டபுரத்தில் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி, நேரடி நடவடிக்கையில் இறங்கியபொழுது அங்கு ஏற்பட்ட முடிவிற்கு ஐக்கிய முன்னணித் தலைவர்களே பொறுப்பு என்று பழி சுமத்தி வீண் பிரசாரத்தை சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினர் செய்து வருகின்றனர். இதனால் தான் 17-ம் திகதி மட்டுவிலில் நடைபெறவிருக்கும் ஆலயப்பிரவேசத்தில், பீக்கிங் கட்சியினருடன் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி சேர்ந்து கலந்து கொள்ளாது.

ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக மற்றும் முற்போக்கு இயக்கங்களுடன் சேர்ந்து நடவடிக்கை எடுப்போம். ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி கடந்த இரண்டரை ஆண்டு காலமாக தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் பலனாக சில ஆலயங்கள் திறந்துவிடப்பட்டன. மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசத்தைப் பொறுத்தவரையில் ஆலய நிர்வாகிகளும், திரு. ஸி. சுந்தரலிங்கமும் அவரின் தொண்டர் படையினரும் அங்கு காட்டிய அநாகரிகமான எதிர்ப்பும், சட்டத்திலுள்ள குறைபாடுகளும் அரசாங்கத்தின் கடைசிநேர கைவிரிப்பும் எமது முயற்சி கைகூடாமைக்குக் காரணமாக இருந்தன.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் கதவடைப்புக்குப் பின்பும் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம், உரும்பராய் கற்பகப்பிள்ளையார் ஆலயம் போன்ற பிரசித்தி பெற்ற கோவில்கள் எமது மக்களுக்கு பெருந்தன்மையுடன் திறந்து விடப்பட்டன.

இம்மாதம் 17ம்தேதி உற்சவம் ஆரம்பிக்கும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலும், செல்வச்சந்நிதி. கோவில்' உரும்பராய் கற்பகப்பிள்ளையார் கோவில், நல்லூர் கந்தசாமி கோவில்களைப் பின்பற்றி அன்பு வழியில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு கதவுகளை திறந்து விடும்படி மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில்பரிபாலன குழுவினரை ஐக்கிய முன்னணி கேட்டுக்கொள்கிறது.

## இஸ்ரேல் குண்டுகள் பொழிந்தது

லண்டன், மார்ச். 14

ஜோர்டான் மீது இஸ்ரேல் இன்று குண்டுகளைப் பொழிந்தன. ஜோர்டான் ராணுவநிலைகள் மீது நடாத்தப்பட்ட இந்தத்தாக்குதலின் போது 3 சிவலியன்களும், மற்றும் 10 பேரும் காயங்களுக் குள்ளானார்கள்.

குண்டுகளைப் பொழிந்ததுடன், யந்திரத்துப்பாக்கிகளாலும் இஸ்ரேலியர் தாக்குதல்நடாத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக்கொண்டு, காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாகத் தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி. குப்தி வித்யாதணய, நிட்டம்புவ. 762

### கல்வி

வகுப்புக்கள்:

மத்திய எழுதுவினைஞர், தபால், தந்தியாளர், சிறுப்பர் பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் அனுபவமுள்ள பட்டதாரிகளால் கற்பிக்கப்படுகின்றன. இருபாலாருக்கும் விடுதி வசதியுண்டு. உடனே சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 543

### தவறிவிட்டது

கூப்பன்கள்

394688 தொடக்கம் 394692 வரையுள்ள 4 கூப்பன்கள் யாழ்ப்பாணம் மக்கள் வங்கியில் தவறிவிட்டன. கண்டெடுப்பவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 763

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (15-3-69)

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்விருப்பம்.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பாட்டு — வி. நடேசன், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி - பரம்தில்லைராசா.

### கஷ்டம் நீங்கியது

சங்கானை, வெள்ளி

பசிதீர்ப்பதற்கு பலமைல் தூரம் பாதயாத்திரை

# கேள்வி விளம்பரம்

## வண்ணுகடவை- கிந்தசிட்டி வீதி அமைத்தல்

புத்தூர்க் கிராமசபை எல்லைக்குள் இருக்கும் வண்ணுகடவை - கிந்தசிட்டி றேட்டு அமைக்கும் வேலைக்கு ரூபா 10,000-க்குக் குறையாமல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல்வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கிராமசபைத் தலைவரால் 27-3-69-ம் திகதி காலை 10 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் கிராமசபை அலுவலகத்தில் 24-3-69-ம் திகதி நண்பகல் 12 மணி வரையும் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 5/-ம், ரெண்டர்ப்பணமாக ரூபா 25/-ம் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. குறிப்பிட்ட வீதி அமைக்கும் வேலைபற்றிய விபரங்கள் அறியவிரும்புவோர் இக்காரியாலயத்திலும், உதவி உள்ளூராட்சிஆணையாளருடைய காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்.

சி. நடராசா,
தலைவர்,
கிராமசபை அலுவலகம்,
புத்தூர்.

கிராமசபை அலுவலகம்,
புத்தூர், 10-3-1969. 1227

61வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர்.
கே. ஆர். விஜயா
நடித்த
தொழிலாளி

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
பண்மா பாசமா

# கேள்வி விளம்பரம்

தென்மராட்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கட்டிடத்திருத்தத்திற்கு கூலி வேலைகளுக்கான கேள்விகள், ரூபா 50,000 - அல்லது மேற்பட அரசாங்கத்தில் அல்லது உள்ளூராட்சி மன்றங்களில் பதிவுசெய்யப்பட்டஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் சமாசத்தில் வைப்புப்பணமாக ரூபா 100/-ம் கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 10/-ம் செலுத்தி 21-3-69 தொடக்கம் 29-3-69 வரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'கட்டிடத்திருத்த வேலைக்கான கேள்வி'' என எழுதப்பட்டு, சீலிட்டு, பதிவுத்தபால் மூலம் 14-4-69 பகல் 12 மணிக்கு முன் சமாஜத் தலைவருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

தெரிவுசெய்யப்பட்டகேள்விக்காரர் ரூபா 1,000 - பிணைப்பணம் செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.

மேலும் விபரங்களைக் காரியாலய நேரங்களில் சமாசத்தில் அறிந்துகொள்ளலாம்.

எஸ். கே. திரவியநாயகம்
தலைவர்,
தென்மராட்சி ப. நோ.
கூ. ச. சமாசம்.
404, 408 கண்டிறோட்,
சாவகச்சேரி,
14-3-69. 1228

## பொலிஸ் — இராணுவம் மோதலின் முடிவு

அளவெட்டி, வெள்ளி

பொலிஸ் பகுதியும் இராணுவமும் மோதிய ஒரு உதைபந்தாட்டப் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

வடமாகாண பொலிஸ் பகுதியின் தெரிவுக் கோஷ்டியும் வடமாகாண இராணுவ தெரிவுக் கோஷ்டியும் கலந்து கொண்ட இந்த உதைபந்தாட்டப் போட்டி யாழ். ஸ்ரேடியம் விளையாட்டு மைதானத்தில்நடைபெற்றது.

## இன்றைய பலன்

(15-3-69)

பங்குனி மாதம், 2 உ

சனிக்கிழமை

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

சித்தங்கேணி, வெள்ளி

சித்தங்கேணி ஜேம்ஸ் பொண்ட் விளையாட்டுக்கழக வீரர்களுக்கும் சித்தங்கேணி மதுபானத்தீர்வைப் பகுதி விளையாட்டு வீரர்களுக்கு மிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் சித்தங்கேணி ஜேம்ஸ்பொண்ட் கழக வீரர்கள் ஒரு இன்னிங்ஸாலும் 50ஓட்டங்களாலும் வெற்றியீட்டினர்கள்.

கரபந்தாட்டம்

## ஷீல்டன் கேடய சுற்றுப் போட்டி

அல்லைப்பிட்டி, வெள்ளி

ஊர்காவற்றுறை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகத்தினரால் வருடந் தோறும் நடாத்தப்பட்டு வரும் கைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டி இம்மாத முடிவில் ஊர்காவற்துறை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. இதில் வெற்றி பெறும் கழகத்திற்கு ஷீல்டன் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தார்வழங்கும் ஷீல்டன் வெற்றிக் கேடயம் வழங்கப்படும் இப்போட்டியில் தீவுப்பகுதியைச் சேர்ந்த பல விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

## நீர்வேலியில் வண்டிச் சவாரி

சங்கானை, வெள்ளி.

மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஒன்றை நீர்வேலி வாலிபர் சங்கத்தார் இம்மாதம் 18-ம் திகதி நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

போட்டி நீர்வேலி கிராமசபைத் தலைவர் திரு. இ. அப்பாத்துரை தலைமையில் நீர்வேலி முற்றவெளிமைதானத்தில் ஆரம்பமாகும். ஏ. பி. என இரு பிரிவுகளாக நடாத்தப்படும். போட்டிகளுக்குமுறையே கோப்பாய் எம் பி திரு. சி. கதிரவேலுப்பிள்ளையும், திரு. மு. பூபாலசிங்கமும் பரிசில்கள் வழங்குவர்.

மத்தியஸ்தராக ரமாதான நீதவான் திரு. வி. நடேசலிங்கம் கடமையாற்றுவார். வெற்றி யீட்டுவோருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

## விளையாட்டு, நாடக போட்டி முடிவுகள்

[illegible] வெள்ளி

கு[illegible] விளையாட்டுக்கழகத்தின் ஆண்டு விழா தலைவர் திரு. தணிகா

மென்பந்து கிரிக்கெட்

# யங்லயன்ஸ் கோஷ்டி இறுதிப் போட்டிக்கு தெரிவு

யாழ்ப்பாணம், சனி

அரியாலைசுதேசியவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் மென்பந்து நொக்கவுட் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் 'யங்லயன்ஸ்' கோஷ்டி, 'கிறீன் பீல்ட்' கோஷ்டியை வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்லயன்ஸ்கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 122 ஓட்டங்களைப் பெற்றது. சகோதரர்களான ஜீவராசாவும் ஜெராசாவும் மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடி முறையே 44, 30 ஓட்டங்களைப் பெற்றனர். பெனடிக்ற் 37 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளையும், தேவராசா 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

கிறீன்பீல்ட் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 65 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 69 ஓட்டங்களையும் பெற்றது. லூயிஸ் 2 இன்னிங்ஸிலும் முறையே 4 - 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

யங்லயன்ஸ் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 16 ஓட்டங்களைப் பெற்று கிறீன் பீல்ட் கோஷ்டியை 9 மேலதிக விக்கட்களால் தோற்கடித்தது, (தே. நி)

## கொக்குவில் இந்து வெற்றி

யாழ்ப்பாணம், சனி

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு மிடையில் கொக்குவில் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்து வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 54 ஓட்டங்களைப் பெற்றது. 2-வது இன்னிங்ஸில் இக்கோஷ்டி 199 ஓட்டங்களைப் பெற்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரி முதல் இன்னிங்ஸில் 155 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 6 விக்கெட் நஷ்டத்துக்கு 96 ஓட்டங்களைப் பெற்று, ஸ்கந்தவரோதயாவை 4 மேலதிக விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திருவாளர்கள் ராமநாதனும், பூபாலும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். (தே. நி

# சைவ சமய பாடத்தில் தங்கப்பதக்கம் பெறுபவர்கள்

இரத்மலானை, வெள்ளி

கொழும்புவிவேகானந்த சபையாரால் 1967-ம் ஆண்டு நடாத்தப்பெற்ற அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சையில் கீழ்க்காணும் மாணவர் அகில இலங்கைப் பரிசில் பெற்றுள்ளார்கள். மேற்பிரிவு 1, 2ல் முதலாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படும். ஏனையோருக்கு புத்தகங்கள் பரிசிலாக வழங்கப்படும்.

பாலர் பிரிவு: 1

மா மனோரஞ்சிதன், யா-கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை. வே. சிவசெந்தில்நாதன், யா-கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை. வே சரஸ்வதி யா- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை

பாலர் பிரிவு 2

மா ராஜினி, கொ-வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம். லோ யோகேந்திரன் கொ- பம்பல

## ஏழாலை கொலை வழக்கு

குரும்பசிட்டி, வெள்ளி

மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் வியாழக்கிழமை ஏழாலை கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இறந்தவரின் பிரேதபரிசோதனைசெய்த வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். சுரேந்திரகுமார் சாட்சியமளித்தார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் இவரை குறுக்குவிசாரணை செய்த பின் எதிரிகளைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு நீதிபதி மேல்விசாரணையை இம்மாதம் 20-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம், வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின்

# பரீட்சையில் தோல்வியால் மாணவர் செய்த முயற்சி

குரும்பசிட்டி, வெள்ளி

பரீட்சையில் தோல்வியுற்ற மாணவன் நச்சுத் திராவகம் குடித்து தற்கொலைசெய்ய முயற்சித்தார். பாடசாலை ஆசிரியர் வகுப்பு அறையில் மாணவரை, பாடசாலைக்கு வரக்கூடாது எனக் கண்டித்த வெட்கத்தை - துக்கத்தை பொறுக்காது மாணவர் தற்கொலை செய்ய' எத்தனித்தார்.

உரும்பராய் இந்துக் கல்லூரி மாணவரான ஜெகநாதன் என்ற வாலிபரை சுன்னாகம் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து தற்கொலைசெய்ய எத்தனித்ததாக குற்றம் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்தனர். மாணவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிபதி மீண்டும் இம்மாதம் 28-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார். மாணவர் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்.

## கோப்பாய் செய்திகள்

நமது நிருபர் ஆர். பி. ஹரன்

### "பஸ்சேவை வேண்டும்"

கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியடியிலிருந்து உரும்பராய் ராஜவீதி யூடாக பஸ் சேவையொன்றை ஆரம்பிக்குமாறு கோப்பாய் கிராமசபை, சம்பந்தப்பட்ட இ. போ. ச. மேலதிகாரிகளைக் கேட்டுள்ளது.

0 0 0

### தெற்குப்பகுதி பிரிக்கப்படும்

கோப்பாய் கிராமசபையின் தெற்குப்பகுதி, நிர்வாக அடிப்படையில் இரண்டாக மிக விரைவில் பிரிக்கப்படவுள்ளது. ஆனல் கோப்பாய் கி. ச.பையின் மூன்று பிரிவுகளும் ஒரு தலைமையிலேயே அமைக்கப் படுமெனத் தெரியவருகிறது.

0 0 0

### "கோப்பாய் வரவேற்கிறது"

''கோப்பாய் தங்களை வரவேற்கிறது'' இச் சொற்றொடரமைந்த வரவேற்புப் பலகைகள் கோப்பாய் கிராமசபை எல்லைப் புறங்களில் வீதியின் இருமருங்கும் தொங்கவிடப்படுமாம். இவ் வரவேற்புப் பலகைகள் எல்லாவற்றிலும் மேற்குறிப்பிட்ட வசனம் மும்மொழிகளிலும் பொறிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

0 0 0

### எம். பி. யை சந்திப்பர்

கோப்பாய் நாவலர் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் மேற்படி பாடசாலையின் கட்டட விஸ்தரிப்பு, கல்வித்தரம், ஆசிரியர் பற்றுக்குறை முதலிய விவகாரங்கள்குறித்து கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

0 0 0

### பொங்கல் விழா

இருபாலை மண்டாக்குளம் நாச்சிமார் கோவில் மாசிப் பொங்கல் விழாநேற்று முன் தினம் இரவு நடைபெற்றது. இன்னிசைக் கச்சேரி, புராணநாடகம் முதலியன விழாவில் இடம் பெற்றன.

0 0 0

### மின்தறி நிலையம்

கோப்பாய் தொகுதிக்

## அல்லைப்பிட்டி கி. ச. தீர்மானம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

அல்லைப் பிட்டிக் கிராமசபையின் மூன்ருவது கூட்டம் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். தவவிநாயகம் தலைமையில் கூடியபோது திருகோணமலை கோணேசர் ஆலயத்தைப் புனித நகராக்க வேண்டும் என்ற தீர்மானம் மூன்ரும் வட்டார அங்கத்தவர் திரு. சூ. செபஸ்தியாம் பிள்ளையால் கொண்டுவரப்பட்டு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது இத் தீர்மானம் உள்ளூராட்சி அமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## கால் நடைகளுக்கு நோய்

சங்கானை, வெள்ளி

வலிகாமம் மேற்குப் பகுதியில்கால்நடைகளுக்கு நோய் அதிகரித்து வருகின்றது. மிருக டாக்டர் ஒருவர் இப் பகுதிக்கு இன்மையால் கால் நடைகள் வளர்ப்போர் தங்கள் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய்களுக்கு தகுந்த நேரத்தில் சிகிச்சையளிக்க முடியாது பலமைல்கள்தூரம் பலதரப்பட்ட கஷ்டங்களை அனுபவித்துச்செல்ல நேரிடுகின்றது.

கிழமைநாட்களில் ஒரு முறைமட்டும் சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி - பரம்தில்லை ராசா.

## கஷ்டம் நீங்கியது

சங்கானை, வெள்ளி

பசிதீர்ப்பதற்கு பலமைல் தூரம் பாதயாத்திரை செய்து வந்த பலாலி பல்கலைக்கழக மாணவர் கஷ்டம் இம்மாத முதல் ஓர் அளவில் நீங்கியுள்ளது. பல்கலைக் கழகத்திலேயே கூட்டுறவு போசனசாலை ஒன்றை பல்கலைகழக மாணவர்கள் ஆரம்பித்துள்ளனர்.


இணுவில்

ஸ்ரீ காலிங்கன்

தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30

ஜெமினி - சரோஜாதேவி

நடித்த

பணமா பாசமா

REGAL at Jaffna
Daily 4 Shows
Viginia Mckenna,
Bill Fravers
in
BORN FREE
(color)


ராணி
யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.

நாகேஸ்வரராவ்-சாவித்திரி
நடித்த

தேவதாஸ் (புதிய கொப்பி)

இங்ஸ்லி

பிளாஸா



ஸ்ரீகிருஷ்ணா
(திருமலை)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
மற்றும்
சினிமாஸ்திரைகளில்

சிவாஜி கணேசன்
கே.ஆர். விஜயா
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின் மகோன்னத
ஈஸ்ட்மென்
கலர்ப் படைப்பு



ஊட்டிவரை உறவு

இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர்கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்

S. S. வாசன்
அவர்களால்

வண்ணக்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற

இரண்டாவது அகில உலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்

மற்றும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர் - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டின் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!




# இன்றைய பலன்

(15-3-69)

பங்குனி மாதம், 2 உ

சனிக்கிழமை

திதி- துவாதசி பகல் 3-04 மேல் திரயோதசி.

நட்சத்திரம் -திருவோணம் பகல் 11-34 மேல் அவிட்டம்.

ராகுகாலம்- 9-21 - 10-51.

சுபநேரம் -3-21 - 4-51

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு நல்லாண்டாகும். குடும்பஸ்தர்கள் வாழ்வில் குதூகல மிகுதியும், தானிய விருத்தி, தனச்சிறப்பு, மாதர்கள் வாழ்வில் மந்த நிலை, பிறர்பொருள் வரவுக்கு நலன்தரும் நல்லாண்டாகும்.

மேஷம்- அன்னையின் ஆசி, அனைத்திலும் வெற்றி.

ரிஷிபம்- இதயப்பூரிப்பு இன்பத்தின் சாயல்.

மிதுனம்- அரச பயம் ஆயுதபீடை.

கடகம்- காதல் கரும்பு, சுவைத்திட விரும்பு.

சிம்மம்- நிற்பந்த நிலை, நிதானம் வேண்டும்.

கன்னி- பிதாவழிப் பொருள், பெருமையும் உண்டு.

துலாம்- செய்தொழில் சிறப்பு, செல்வமும் உண்டு.

விருச்சிகம்- புதுவழி நாட்டம், புண்ணிய விருப்பு.

தனுசு- எண்ணித்துணி, எதிரிகள் உண்டு.

மகரம்- மக்கள் பிணி, மனப்போராட்டம்.

கும்பம்- காதல்செய் கஷ்டம், வாழ்வில் இனிக்கும்.

மீனம்- விவாதமேடை, வெற்றி உமக்கே.

—சோதிடக்கலாநிதி—

திருமதி வேலுப்பிள்ளை


MANOHARA
JAFFNA
Daily 6-30, 9-30 p.m.
Pre-Poya, Poya 2-30 p.m.
Azad Shakila
in
TARZAN AND THE WONDERFUL LAND
(Hindi)


...டுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

## விளையாட்டு, நாடக போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, வெள்ளி

குடத்தனை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் ஆண்டு விழா தலைவர் திரு. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது. ஆண்டு விழாவை முன்னிட்டுக் கரபந்தாட்ட போட்டி ஒன்று நடாத்தப்பட்டது.

இக்கரபந்தாட்ட மோதலில் நாகர்கோவில் வெண்மதி விளையாட்டுக்கழகத்திற்கும், குடத்தனை உதய சூரியன் விளையாட்டுக்கழகத்திற்குமிடையே கடும் போட்டி ஏற்பட்டது. இம்மோதலில் நாகர்கோவில் வெண்மதி விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது

கபாடிப் போட்டியில் குடத்தனை உதயசூரியன் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

அஞ்சலோட்டத்தில் நாகர் கோவில் வெண்மதி விளையாட்டுக்கழகம் முதலிடத்தையும், அம்பன் அண்ணா விளையாட்டுக் கழகம் இரண்டாமிடத்தையும், மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

நாடகப் போட்டியில் "கண்ணே உனக்காக" முதல் பரிசைப்பெற்றது "மதுவின் முன் மனிதன்" இரண்டாவது பரிசையும் "கற்புக்கரசி" மூன்றாவது பரிசையும் பெற்றுக்கொண்டன. இந்நாடகப்போட்டியில் மூன்று நாடகங்கள் இடம் பெற்றன.

திருவாளர்கள்: பரமானந்தம், செலஸ்ரின், காரியாதிகாரியின் பிரதம லிகிதர் ஆகியோர் விளையாட்டு போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்தனர்.

## ஜேர்மனி சென்றார்

சங்கானை, வெள்ளி

சண்டிலிப்பாயைச் சேர்ந்தவரும் வாழைச்சேனை காகிதஆலை கூட்டு ஸ்தாபன உதவி கெமிஸ்ட்டுமான முத்துத்தம்பி இராமநாதன் மேற்கு ஜெர்மன் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உபகாரச்சம்பளம்பெற்றுமூன்று வருடகாலம் கடதாசி உற்பத்தி சம்பந்தமான நுணுக்க வேலைகள் படிப்பதற்கு இம்மாதம் 4-ம் திகதி ஜெர்மன் சென்றுள்ளார்.

இவர் யாழ். மத்திய கல்லூரி, சென்னை கிறிஸ்தவ கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

வெட்டி மாணிக்கவாசர் வித்தியாசாலை. வே சரஸ்வதி யா- கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாசாலை

பாலர் பிரிவு 2

மா ராஜினி, கொ-வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம். லோ யோகேந்திரன் கொ- பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி அ சத்தியபாமா, கொ-வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம்.

ஆரம்பபிரிவு 1

வீ சிறீவீரகனக குமார், யா- புலோலி தெற்கு புற்றளைவித்தியாலயம், ம அனுசூயா கொ- வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம், சி குமாரகுலசிங்கம் யா - கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாசாலை.

ஆரம்பபிரிவு 2

தெ. சிறீதரன், கழுகாரைதீவு சல்லித்தீவு அ கு. க. பாடசாலை.

சி கோமளவனிதா, மட்- பெரியகல்லாறு அ த க பாடசாலை செ காசிவிசுவநாதன் க [வட்டளை அ சி த பாபாசாலை.

கீழ்ப்பிரிவு 1

க சரோஜினி, கொ-வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம், செ செல்லக்கதிரமலை சாவகச்சேரி இந்துக்கல்லூரி, ச சியாமளா, கொ-வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம்.

கீழ்ப்பிரிவு 2

வே சுகுணா, தெல்லிப்பளை யூனியன்கல்லூரி, ச இராஜேஸ்வரி, யா-மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகாவித்தியாலயம், சி இராஜேஸ்வரி, யா- வேலணை மத்திய மகாவித்தியாலயம்

மத்தியபிரிவு

சி ஜீவா, கொ- வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம், மா தயாபரன் கொழும்பு ரோயல் கல்லூரி, செ புஷ்பராணி, பொகவந்தலாவ ...ரோசுறி அ த க பாடசாலை

மேற்பிரிவு 1

ச பரமேஸ்வ... யா-கொக்குவில் சரஸ்வதி வித்தியாசாலை, ந ஜெகநாதன், யா- வேலணை மத்தியமகாவித்தியாலயம், ந திருக்கேஸ்வரன் 480-160, காலி ரோட்டு, கொழும்பு-6

மேற்பிரிவு 2 தி சாந்தலட்சுமி, கொ-வெள்ளவத்தை சிவானந்த நிலையம். செ ரூபாவதி, கொ-வெள்ளவத்தை சைவமங்கையர்வித்தியாலயம், து மீனாட்சி, கொ-வெள்ளவத்தை சிவானந்த நிலையம்.

...ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு நீதிபதி மேல்விசாரணையை இம்மாதம் 20-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம், வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 16-ம் திகதி ஏழாலை வடக்கு வாசியான தம்பிமுத்து நல்லையா என்பவரை கொலைசெய்ததாக மகாலிங்கம், தங்கராசா, விசுவலிங்கம், கதிர்காமலிங்கம் ஆகிய நால்வருக்கு எதிராக சுன்னுகம் பொலிசாரால் இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளது. 1-ம், 4-ம் எதிரிகள் 3-ம் எதிரியின் புத்திரர்களாகும்.

பொலிஸ்தரப்பில் வழக்கறிஞர் ரி. தம்பிரத்தினம் வழக்கை நடாத்தினர்.

## இருகிராமங்கள் சீர்பெறும்

உடுப்பிட்டி, வெள்ளி

கட்டைவேலிக் கிராமசபையின்கீழுள்ள பிரயோசனமடைந்த இரு கிராமங்களை சிரமதானம் மூலம் இணைப்பதற்கு வடபகுதி விசேஷ ஆணையாளர் 15,000 ரூபா ஒதுக்கியுள்ளார். அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த உள்ளூராட்சிஅமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா இக்கிராமங்களைப் பார்வையிட்டதைத் தொடர்ந்தே இவ்வுதவி கிடைத்துள்ளது·தாக

...பொங்கல் விழாநேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இன்னிசைக் கச்சேரி, புராணநாடகம் முதலியன விழாவில் இடம் பெற்றன.

0 0 0

## மின்தறி நிலையம்

கோப்பாய் தொகுதிக் கெனு கோண்டாவில் றேட்டில் நிறுவப்படவுள்ள 48 மின்தறிகள் கொண்டதைத் தொழில் நிலையத்துக்கு மின்சாரவசதி செய்வதற்கு யாழ். கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்குகோப்பாய் கிராமசபை அனுமதியளித்துள்ளது.

0 0 0

## சோலைவரி

கடந்த 7 ஆண்டுகளுக்கு முன் கோப்பாய் கிராம சபையால் வரிகள் தற்போது ஏற்ற இறக்கங்கள் காணப்படுவதால் புதிய மதிப்பீடு செய்வதற்கு இக்கிராமசபை முன்வந்துள்ளது.

0 0 0

## வரிவசூலிப்பதில் கி. ச. உறுப்பினர்கள்

கோப்பாய் கிராமசபை அங்கத்தவர்கள் சபைக்கு வரவேண்டிய நிலுவை வரிப் பணங்களைச் சேகரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். வரி சேகரிப்பையே தமது முதற்கடமையாகச் செய்ய வேண்டுமென்று 14-ம் வட்டார அங்கத்தவர் திரு. சிவபாதம் கொண்டுவந்த பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேறியதைக்.

...கள் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய்களுக்கு தகுந்த நேரத்தில் சிகிச்சையளிக்க முடியாதுபலமைல்கள்தூரம் பலதரப்பட்ட கஷ்டங்களை அனுபவித்துச்செல்ல நேரிடுகின்றது.

கிழமைநாட்களில் ஒருமுறைமட்டும் சங்கானை காளை ஸ்தானத்திற்கு விஜயம்செய்யும் மிருக டாக்டரை சிலவேளைகளில் சந்திக்கமுடியாத நிலையும் ஏற்படுவதாகவும் இதனால் மக்கள்பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

## வள்ளுவர் விழா

புன்னலைக்கட்டுவன் வெள்ளி

உரும்பராய் இந்துக் கல்லூரி சரித்திர அரசியல் மன்றம் கடந்த வியாழக்கிழமை வள்ளுவர் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. திருவாளர்கள் க கணபதிப்பிள்ளை, எம். வி. பாலசுந்தரம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து அங்கத்தவர்கள் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

0 0 0

## ஓய்வு பெற்றார்

கடந்த 36 ஆண்டு காலமாக சோப்பாய் றோமன் கத்தோலிக்க பாடசாலைத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ஏ. மரியாம்பிள்ளை இம்மாதத்துடன் ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.


இன்று முதல்

யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

முத்துராமன், ராஜ்ஸ்ரீ
நாகேஷ், மனோரமா,
சுந்தரராஜன்,
ஜெயபாரதி

நடித்த

அனுபவி ராஜா அனுபவி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் மீண்டும் மக்கள் ஆட்சி ஏற்படுத்த அயூப் இணக்கம்

## ஜனநாயக செயல் கமிட்டி கலைக்கப்பட்டது

## எதிர்க்கட்சித் தலைவர்களில் சிலர் அதிருப்தி



ராவல்பிண்டி, மார்ச் 14

பாகிஸ்தானில் வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை அளித்து பாராளுமன்ற ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்கு அதிபர் அயூப் கான் ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து எட்டு எதிர்க்கட்சிகளைக் கொண்ட ஜனநாயக செயல்கமிட்டி கலைக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக செயல் கமிட்டியின் நோக்கங்கள் நிறைவேறிவிட்டதால் கலைத்துவிட்டதாக அதன் அமைப்பாளரான நவாப்சாதா நஸருல் லாகான் அறிவித்துள்ளார்.

ஜனநாயக செயல் கமிட்டியுடனும், இதர எதிர்க்கட்சித் தலைவர்களுடனும் வட்டமேசை மகாநாடு நடத்திய பின்னர் அதிபர் அயூப்கான் அவர்களின் கோரிக்கைகளில் வயதுவந்தோர்க்கு வாக்குரிமையளிக்கவும், பாராளுமன்ற மக்கள் ஆட்சிக்கு வழிவகுக்கவும் ஒப்புக் கொண்டுவிட்டார்.

இதுபற்றி நேற்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு வந்தவுடனேயே அவாமிக் கட்சித் தலைவர் திரு. முஜிபுரகுமான் ஜனநாயக செயல் கமிட்டியிலிருந்து விலகிக் கொண்டதாக அறிவித்தார். மக்களின் கோரிக்கைகளை ஜனநாயக செயல் கமிட்டி நிறைவேற்றத் தவறிவிட்டதாக அவர் குற்றஞ் சாட்டினார். அதன்பின்னர் ஜனநாயக செயல் கமிட்டி கலைக்கப்பட்டுவிட்டதாக நவாப்சாதா நஸருல் லாகான் அறிவித்துள்ளார்.

ஜனநாயக செயல்கமிட்டியின் முக்கிய நோக்கங்கள் நிறைவேறிவிட்டதால் அது கலைக்கப்படுவதாக அவர் அறிவித்துள்ளார்.

அதிபர் அயூப்கான் பாகிஸ்தானில் மக்கள்ஆட்சி ஏற்படுவதற்கு வழிவகுக்க ஒத்துக் கொண்டுவிட்ட போதிலும் எதிர்க்கட்சிகள் பல அவர் திட்டத்தைப் பற்றி பல்வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

### அஸ்கர்கான்

முன்னாள் விமானப்படை எயர் மார்ஷல் அஸ்கர்கான் கருத்துத் தெரிவிக்கையில் பாகிஸ்தானில் முதலில் கட்சிப்பற்றற்ற ஆட்சி ஏற்பட வேண்டும் என்றும் இரு மாகாணங்களிலும் கவர்னர்கள் மாற்றப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

### பூட்டோ

முன்னாள் வெளிநாட்டு அமைச்சரும் மக்கள் கட்சித் தலைவருமான திரு. சுல்பிகார் அலிபூட்டோ ஜனநாயக செயல்கமிட்டியின் நடவடிக்கைகள் பற்றித் தமக்கு எப்போதுமே சந்தேகம் இருந்து வந்ததாகக் கூறினார். அயூப்கான் உடனடியாகப் பதவியிலிருந்து இறங்க வேண்டும் என்ற தமது பழைய கருத்தை அவர் மீண்டும் வலியுறுத்தினார். புதிய ஆட்சி ஏற்படும் வரையில் நடுநிலையான பராமரிப்பு அரசாங்கம் ஏற்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

முன்னாள் கிழக்குப் பாகிஸ்தான் நீதிபதி திரு. முஸத் கருத்துத் தெரிவிக்கையில், அயூப்கான் ஒரு கையால் கொடுத்ததை மறுகையால் பறித்துக் கொண்டுவிட்டார் என்றார்.

## சீனா மீண்டும் எச்சரிக்கை

பீகிங் மார்ச். 14

சீன எல்லையில் மீண்டும் சோவியத் காவல் படையினர் அத்துமீறியிருப்பதாக சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

## காணவில்லை

உருத்திரபுரம், வெள்ளி

உருத்திரம் 10-ம் வாய்க்காலிலிருக்கும் வீட்டிலுள்ள ஒரு பெண்ணினுடைய தாலிக்கொடி காணாமற் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'தேர்தலை உடன் நடத்துக'

பருத்தித்துறை, வெள்ளி

'நெல்லியடி பட்டினசபை தேர்தலை உடனடியாக நடத்துக' எனக்கோரும் மகஜர் ஒன்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கு நெல்லியடிப் பட்டினசபை வரியிறுப்பாளரால் அனுப்பப்பட்டுள்ளது.

மகஜரில், பட்டினசபை நூலகம், மருந்தகம், சந்தை, ஆலங்கட்டைச் சுடலை ஆகியனவற்றின் நிர்வாகம் மிகவும் சீர்குலைந்த நிலையிலிருப்பதாகவும், நெல்லியடியில் கட்டப்பட்ட பன்னிரு கடைகள் இதுவரை வாடகைக்கு விடாமையால் சபைக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மின்சார வசதி செய்து வைப்பதில்அவநாவசியதாமதம் ஏற்படுவதாகவும், விசேஷ ஆணையாளர் கிரமமாக சபைக்காரியாலயத்திற்கு வருவதில்லை எனவும் குறை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆலங்கட்டைச் சுடலைக்குக்கொண்டு செல்லப்படும் பிரேதங்களை தகனஞ்செய்ய சில வேளைகளில் ஐந்து மணித்தியாலங்கள் எடுப்பதாகவும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சூயஸ் நெடுகிலும் மீண்டும் மோதல்

கெய்ரோ, மார். 14

சூயஸ்கால்வாய்நெடுகிலும் நேற்றிரவு மீண்டும் சுமார் இரு மணி நேரம் கடும் சண்டை ஏற்பட்டது.

ஐக்கியஅரபுக் குடியரசுத் துருப்புகள் 4 இஸ்ரேலிய ஹெலிகொப்டர் விமானங்களையும் 6 கவச மோட்டார்களையும் துவம்சம் செய்ததாக அறிவித்தது. பலத்த ஆட்சேதம் விளைவித்ததாகவும் அறிவித்தது.

இரு தரப்பினரும் பாதுகாப்பு சபைக்கும் புகார் செய்துள்ளன. சண்டையை முதலில் ஐ. நா. பார்வையாளர்கள் தடுத்து நிறுத்தினார்கள். ஆனால் மீண்டும் கைகலப்பு ஒருமணி நேரம் நீடித்தது.

## பிரி. பிரதமர் வில்சன் நைஜீரியா விஜயம்

லண்டன், மார்ச். 14

பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. வில்சன் நைஜீரியாவில் நடைபெறும் சண்டைபற்றி ஆராய நைஜீரியாவுக்குப் போகவிருக்கின்றார். நைஜீரியாவில் அதிபர் கோவாவுடன் அவர் ஆலோசனைகள் நடத்துவார். இத்தகவல் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் அறிவிக்கப்பட்டது.

நைஜீரியாவில் அவர் நடுவராகப் போகவில்லையென்று ... என்றும் அறிவிக்கப்பட்டது. திரு. வில்சன் பயாப்பிற்பகுதியில் நைஜீரியாவுக்குப் போவார் என்று கூறப்படுகின்றது. நேற்று காமன்ஸ் சபையில் இடம்பெற்ற நைஜீரியா பற்றிய விவாதத்தின்போது ஆயுதங்கள் நைஜீரியாவுக்கு வழங்குவதை இப்பொழுது நிறுத்தக்கூடாது என்று இருதரப்பிலும் முன் ஆசன அங்கத்தவர்கள் வலியுறுத்தினார்கள்.

பயாவ்ரா தலைவர் ஒரு மாத காலத்துக்கு சண்டை நிறுத்தம் ஏற்படவேண்டுமென்று விடுத்த அறிவித்தலை நைஜீரியா நிராகரித்து விட்டது. இதுவொரு தந்திர...

## அனலைதீவு கி. ச. தேர்தல்: தலைவர் போட்டியிடவில்லை

### வாலிபர் இயக்கம் 6 வட்டாரத்தில் போட்டி

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு கிராமசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நேற்று கிராம சபைஅலுவலகத்தில்வைத்து தேர்தல் அதிகாரி திரு. கந்தசாமியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 7 வட்டாரங்களைக் கொண்ட இத்தேர்தலில் 6 வட்டாரத்தில் அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்கம் தனது அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது. மொத்தம் 16பேர் போட்டியிடும் இத்தேர்தலில் தற்போதய 3 அங்கத்தவர்கள் மட்டும் போட்டியிடுகின்றனர். கிராமசபைத் தலைவர் திரு. சு. நாகலிங்கம் போட்டியிடவில்லை.

போட்டியிடும் அபேட்சகர் விபரம் வருமாறு:-

முதலாம்வட்டாரம்: திரு. எஸ். முத்துக்குமாரு, திரு. வ. கந்தையா (வாலிபர் இயக்கம்), 2-ம் வட்டாரம்: திரு. ஐ. சபாபதிப்பிள்ளை, திரு. தி. சின்னையா, 3-ம் வட்டாரம்: திரு. பொன்னம்பலம்(வாலிபர்இயக்கம்) திரு. வி. மயில்வாகனம். 4- வட்டாரம்: திரு. நா. அமிர்தலிங்கம் (வாலிபர் இயக்கம், திரு. தனிநாயகம், 5-ம் வட்டாரம்: திரு. பே. கணபதிப்பிள்ளை (வாலிபர் இயக்கம்), திரு. கா. சபாரெத்தினம், திரு. மயில்வாகனம், 6-ம் வட்டாரம்: திரு. க. வேலாயுதம் (வாலிபர் இயக்கம்) திரு. இ தம்பையா, 7-ம் வட்டாரம் திரு. சு. தயாபரராசா (வாலிபர் இயக்கம்) திரு. வி. கந்தையா, திரு. சு. பசுபதிப்பிள்ளை.

## புதிய விஞ்ஞான கூடம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி புதிய விஞ்ஞான கூடத்தை யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இன்று மாலை 3-45 மணிக்கு திறந்துவைக்கவிருக்கிறார். இதனையொட்டி நடைபெறும்பொருட்காட்சியை வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் திறந்துவைப்பார்.

## ரிஷூ ஆலை

பம்பலப்பிட்டி, வியா.

கிழக்கிலங்கைக் கூட்டுஸ்தாபனம் கொழும்பில் ரிஷூ பேப்பர் ஆலையொன்றை நிறுவத் தீர்மானித்துள்ளது. ஆஸ்பத்திரிகளில் கூடுதலாக உபயோகிக்கப்படும் இந்த ரிஷூவை வருடம் 3000 தொன்னிலிருந்து 6000 தொன் வரை உற்பத்திசெய்ய அது தீர்மானித்துள்ளது.

## "கிருபானந்தவாரியாரும் ஒரு தி. மு. க. தானும்"

### எம். ஜி. ஆர் கூறுகிறார்

திருச்சி, மார்ச் 14

"கிருபானந்தவாரியார் கடவுள் ஒருவரே என்று வணங்குகிறார் இதையே ஒரே குலம் ஒருவனே தேவன் என்று அண்ணா கூறினார். யாரும் அனாதையாக இருக்கக் கூடாது. கல்வி, பண்பாடு, பகுத்தறிவு பெருக வேண்டும் என்கிறார் அண்ணா. இதைத்தான் வாரியாரும் கூறுகிறார். எனவே வாரியாரும் ஒரு தி. மு. க. தான் என்று எனக்குத் தோன்றுகிறது.

இவ்வாறு மக்கள்திலகம் எம். ஜி. ஆர். இங்கொரு கூட்டத்தில் கூறினார்.

"பொன்மனச் செம்மல்" என்ற புதிய பட்டத்தை நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு கிருபானந்தவாரி... எனக்குத் தனிப்பட்ட பற்றும், மரியாதையும் ஏற்படுகிறது.

சமீபத்தில் நெய்வேலியில் கிருபானந்தவாரியார் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி அவரே இனி எதுவும் பேச...



# இதிகாச புகழ்மிக்க சாதனை

# அப்போலோ-9 பற்றி நிக்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமிட்டி கலைக்கப்பட்டுவிட்டதாக நவாப்சாதா நஸருல்

என்றும் குறிப்பிட்டார்.

பறித்துக் கொண்டுவிட்டார் என்றார்.

# இதிகாச புகழ்மிக்க சாதனை அப்போலோ-9 பற்றி நிக்சன்

## சந்திரனில் இறங்குவது அடுத்த முயற்சியாம்

வாஷிங்டன், மார்ச் 14

**அமெரிக்கவிண்வெளிக்கலமான அப்பபோலோ9 தனது பத்துநாள்பிரயாணத்தை முடித்துக் கொண்டு பூமிக்குத்திரும்பியிருப்பதை ஓர் இதிகாசப்புகழ் மிக்க சாதனை என்று அதிபர் நிக்ஸன் பாராட்டியிருக்கின்றார். இந்தச் சோதனை மூலம் மனிதகுலம் முழுவதுமே பயனடையும் என்று அதிபர் கூறினர்.**

விண்வெளியில் பத்துநாட்கள் வெற்றிகரமாக சோதனைகளை நடத்தியபின் நேற்று இரவு இலங்கை நேரப்படி சுமார் பத்தரை மணிக்கு அட்லாண்டிக்சமுத்திரத்தில் பத்திரமாக அப்போலோ-9 கலம் பகாமாத்தீவுக் கருகில் வந்திறங்கியது. கலம் இறங்குவதற்காகத்திட்டமிடப்பட்ட இடத்தில் சரியாக வந்து அதுவிழுந்ததாகக்கூறப்பட்டது. கலம்இறங்குவதற்காகக் காத்திருந்த மீட்புக் கப்பல் உடனே ஸ்தலத்துக்கு விரைந்து சென்றது. கப்பல் இருந்த இடத்துக்கு 4 மைல் தொலைவில் கலம் இறங்கியது.

இந்த அப்போலோ கலம் அனுப்பப்படுவதற்கு சுமார் 34 கோடி டாலர் செலவாகியிருக்கிறதாம், சுமார் 40 லட்சம் மைல்களை அது பிரயாணம் செய்து திரும்பியிருக்கின்றது.

அப்போலோ-9விண்வெளியில் நடத்தியுள்ள சோதனைகள் அடுத்த ஜூலை மாதம் வாக்கில்மனிதன் சந்திரமண்டலம் தரையில்போய் இறங்குவதற்கு வழிவகுத்துள்ளதாம். விண்வெளியில் கலம் நடத்திய சோதனைகளில் சந்திரனில்போய் இறங்குவதற்கான கலத்தை பரீட்சித்தது அதிமுக்கிய அம்சமாகும். இக்கலத்தை தாய்க்கலத்திலிருந்து பிரித்துக்கொண்டு பல மைல் தூரம் விண்வெளி வீரர்கள் அதனைச் செலுத்திச்சென்றபின் மீண்டும் தாய்க்கலத்தில் வந்து இணைத்தார்கள். பிறகு அக்கலம் தாய்க்கலத்திலிருந்து பிரிந்து விண்வெளியிலேயே விடப்பட்டது. அப்பல்லோ-9 வீரர்கள் நடத்திய மிக முக்கியமான இன்னொரு நிகழ்ச்சி விண்வெளியில் ஒருவர் நடந்ததாகும். முதல் தடவையாக தாமே பிராண வாயுக் கருவிகளைப் பயன்படுத்திக்கொண்டு அவர் விண்வெளியில் நடந்தார்.

அப்போலோ-9 மொத்தம் 10 நாட்கள், ஒருமணி 53 நிமிடங்கள் விண்ணில் பிரயாணம் செய்துள்ளது. முதலில் பெர்மூடாவுக்கு தென்மேற்கே கடலில்வந்து இறங்குவதாகத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் கடல் கொந்தளிப்பு காரணமாக பூமியை ஒருசுற்று அதிகமாக சுற்றிவிட்டு புதிதாகக் குறிக்கப்பட்ட இடத்தில் விண்வெளி வீரர்கள் வந்து இறங்கினார்கள். மொத்தம் 151 தடவைகள் விண்வெளிக் கலம் பூமியைச் சுற்றியிருக்கின்றது. ஒரு சுற்று அதிகமாகச்சுற்றியதால் 97 நிமிடங்கள் அதிகமாக அதற்கு எடுக்கவேண்டியிருந்தது.

கலம் வந்து இறங்கியவுடன் அதிபர் நிக்ஸனுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் தம் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

அப்போலோ-9ன் சாதனைகளை ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டும் வெகுவாகப்பாராட்டியுள்ளார்.

### சந்திரனில் இறங்கும் திகதி

சந்திரனில் மனிதன்போய் இறங்குவதற்கானதிகதி இம்மாதம் 24-ம் திகதி அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அனேகமாக அப்போலோ-10 கலத்தின் மூலம் இந்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்று கருதப்படுகின்றது.

மே. வங்கத்தில்

## மேல்சபை ரத்தாகும்

புதுடில்லி, மார்ச் 14

மேற்கு வங்க மாநில அரசாங்கம் ராஜ்யத்திலுள்ள மேல் சபையை ரத்து செய்துவிடமுடிவு செய்திருக்கின்றது. இதுசம்பந்தமான ஒரு சட்டம் விரைவில் சட்டசபையில் தாக்கல் செய்யப்படவிருக்கின்றது.

முதலமைச்சர் அஜோய் குமார் முகர்ஜியும் துணைப்பிரதம மந்திரி திரு. ஜோதிபசுவும் விரைவில் புதுடில்லிக்கு வந்து ராஜ்யத்துக்கு மேலும் அதிகநிதி வசதிகள் தேவையென்பதை திட்டக்கமிஷனிடம்வலியுறுத்தவிருக்கிறார்கள்.

ராஜ்யத்திலுள்ள மேல் சட்டசபையை ரத்துச்செய்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி மேற்கு வங்க கம்யூனிஸ்ட் மந்திரிகளையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் வற்புறுத்தியுள்ளது.

## நாவலர் விழா

குரும்பசிட்டி, வெள்ளி

குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமைமாலை குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தினரின் நாவலர் ஞாபகார்த்த 2-வது வருட நாடக விழாவை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை மங்கள தீபமேற்றி ஆரம்பித்து வைப்பார்.

நாவலர் அரங்கில் நடைபெறும் முதல்நாள் நிகழ்ச்சியில்கலந்துகொள்ளும்நாடக மன்றங்கள் விபரம்வருமாறு நீர்வேலி கலைச்செல்வி கலாமன்றம்- 'பி. எஸ். சி. மாப்பிள்ளை' கீரிமலை உதய சூரியன் நாடக மன்றம்- 'சமூகத் துரோகி' ஏழாலைமேற்கு முத்தமிழ்மன்றம்- 'ஆமூர் அரசன் யார்' சுண்டிக்குளி கே. பி. எம். நாடக மன்றம்- 'நீருற்று' சில்லாலை இளைஞர் மன்றம்- 'அண்ணா என் தெய்வமே'.

சனைகள் நடத்துவார். இத்தகவல் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் அறிவிக்கப்பட்டது.

நைஜீரியாவில் அவர் நடுவராகப் போகவில்லையென்றும் அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறியவே போகிறார் என்றும் அறிவிக்கப்பட்டது. திரு வில்சன் பயாப்ராவுக்குப் போகமாட்டார்.

திரு. வில்சன், இம்மாதம்

தக்கூடாது என்று இருதரப்பிலும் முன் ஆசன அங்கத்தவர்கள் வலியுறுத்தினார்கள்.

பயாவ்ரா தலைவர் ஒரு மாத காலத்துக்கு சண்டை நிறுத்தம் ஏற்படவேண்டுமென்று விடுத்த அறிவித்தலை நைஜீரியா நிராகரித்துவிட்டது இதுஒரு தந்திரமாகவிருக்கும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## வீணை வித்துவான் பாலச்சந்தர் பிரான்ஸ் விஜயம்

சென்னை, மார்ச் 14

வீணை வித்வான் திரு. எஸ். பாலச்சந்தர் பம்பாய்க்குப் பயணமானார். அங்கிருந்து பாரிஸுக்குச் செல்வார். திரு.பாலச்சந்தர் பிரான்ஸ், பெல்ஜியம், மேற்கு ஜெர்மனியில் மூன்று வாரம் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

அவருடன் தஞ்சை திரு. உபேந்திரன் (மிருதங்கம்) சென்றிருக்கிறார்.

பிரான்ஸில் திரு. பாலச்சந்தரின் சுற்றுப்பிரயாணம் பாரிஸிலுள்ள பிரான்ஸ்-இந்திய கலாச்சார உறவுகள் கேந்திரத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

மார்ச் 18, 21ந் தேதியும் பாரிஸில் இரண்டு கச்சேரிகள் நடக்கும். மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழாவையொட்டி இக்கச்சேரிகள் விஷேசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திரு. பாலச்சந்தர் பல சர்வ கலா சாலைகளில் வீணையை வாசித்துக்காட்டி விளக்க உரையும் வழங்குவார். பிரெஞ்சு டெலிவிஷனிலும் தோன்றுவார். திரு. பாலச்சந்தர் ஐரோப்பா, அமெரிக்கா, ரஷ்யாவில் ஏற்கனவே சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். எனினும் அவர் பிரான்ஸுக்குச் செல்வது இதுதான் முதல் தடவை. அவர் ஏப்ரல் 5ந் தேதி இந்தியா திரும்புவார்.

## 3 மாதம் வழங்கப்படவில்லை

சங்கானை, வெள்ளி

சங்கானை பட்டின சபை எல்லைக்குட்பட்ட சகலபாடசாலைகளுக்கும் இதுகால வரை வழங்கப்பட்டுவந்த இலவச பாடசாலை புத்தகங்கள்மூன்றுமாதகாலமாகியும் வழங்கப்படவில்லை. இம்மாதத்துடன் அனேகமாக பாடசாலைகள் விடுதலைக்காக மூடப்படவிருக்கின்றன. ஏழைப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் இவ்விலவச புத்தகங்கள் உரிய வேளையில் வழங்கப்படாமையால் பிள்ளைகளும் பெற்றோரும் கஷ்டத்திற்குள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

## 'அரசியல் நாணயம்'

உடுவில், வெள்ளி.

''இதுவரை வாழ்ந்ததமிழ் அரசியல் தலைவர்களுள் அரசியல் பண்பு அரசியல்நாணயம் ஆகியவற்றுக்கு இலக்கணமாக திகழ்ந்தவர் திரு. சி. என். அண்ணாதுரை அண்ணாதுரையின் அரசியல் நாணயத்தைபல துறைகளில் காண முடிகிறது.''

உடுவில் இளைஞாகளால் ஒழுங்கு செய்யப்பட்ட அண்ணாதுரை அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய திரு. எம். ஆலாலசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இந்த அஞ்சலிக் கூட்டத்திற்கு திரு. இராசதுரை தலைமை வகித்தார்.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசியதாவது:

தமிழர் மத்தியில் நிலவிய ஊழல்களையும், மூட நம்பிக்கைகளையும் ஒழித்துக்கட்டும் செயல் வீரராக திரு. அண்ணாதுரை விளங்கினார். தமிழர்களிடையே சமுதாயத்தில் அரசியலில்ஒருபெரு மாற்றத்தை உண்டு பண்ணியவர் அவர். இந்த நூற்றாண்டில் தமிழர் சிறப்புடன் வாழ வைத்தவர் அவர். சுருங்கச் சொன்னால் தமிழர் மத்தியில் சமயத்தில், எழுத்துலகில் மொழியில் அரசியலில் ஒரு மறுமலர்ச்சியை தோற்றுவித்தவர் திரு. அண்ணா எனக் கூறலாம். அண்ணாவின் கொள்கைகளைப் பின்பற்றி எம் மத்தியில் நிலவும் தீண்டாமையை ஒழித்து தமிழர் ஓரினம் என வாழ்வதே நாம் அவருக்கு செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும்.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் சுன்னாகம் பட்டின சபை உறுப்பினா திரு. அ. நடராசா ஆசிரியர் திரு. நா பதஞ்சலி ஆகியோர் உட்பட வேறு பலரும் கூட்டத்தில் பேசினர்.

## தி. மு. க. தான் என்று எனக்குத் தோன்றுகிறது.

இவ்வாறு மக்கள்திலகம் எம். ஜி. ஆர். இங்கொரு கூட்டத்தில் கூறினார்.

''பொன்மனச் செம்மல்'' என்ற புதிய பட்டத்தை நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு கிருபானந்தவாரியார் சூட்டினார்.

திருச்சிமாவட்டம் கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் திருப்பராய்துறை ராமகிருஷ்ண குடில் அனாதை மாணவர்கள் வளர்ச்சி நிதிக்காக ஜெயலலிதா நடனம் நடந்தது. இந்த விழாவுக்கு எம். ஜி. ஆர். தலைமை வகித்தார். இதன் மூலம் ஒன்றரைலட்சம்ரூபா வசூலானது. அது குடிலுக்காகக் கொடுக்கப்பட்டது.

விழாவில் கிருபானந்த வாரியார் கலந்துகொண்டு கூறியதாவது:-

இரண்டு ஆண்டுகள் தவணைசொல்லி இப்போது தான் என் நண்பர் எம். ஜி. ஆர். வந்து இருக்கிறார். வானத்தில் இருககும் சந்திரனைப் போன்றவர் இந்த ராமச்சந்திரன், இவர் சென்ற இடமெல்லாம்குளிர்ச்சி பெறும். மக்கள் தலைவனாக விளங்கும் இவர் பண்பால் உயர்ந்த மனிதர். உலகத்திலேயே சிறந்தது தங்கம். தங்கம்போன்ற மனம் படைத்தவர், இவர்போன்ற கொடைவள்ளல் இருக்கும் வரை நாடு சிறப்படையும். எம். ஜி. ராமச்சந்திரனுக்கு 'பொன்மனச் செம்மல்' என்ற பட்டத்தைக் கிருபானந்தவாரியார் கொடுத்தார் விவேகானந்தர் உருவம் பொறித்த வெள்ளைத் தட்டில் இந்தப் பட்டம்எழுதப்பட்டு இருக்கிறது.

இதுபோன்று ஜெயலலிதாவுக்கு 'நாட்டிய கலாமணி' என்ற பட்டத்தை வாரியார் வழங்கினார்.

அடுத்து விழாவில் எம். ஜி. ஆர். பேசியதாவது:-

இங்கு நடத்தப்படும் இந்த நிகழ்ச்சி அனாதைக் குழந்தைகள் நல்வாழ்வுக்காக நடத்தப்படுவதாகும். நீங்கள்தரும் ஒவ்வொரு ரூபாயும் நல்லகாரியத்திற்காகக் கொடுக்கப்பட்டதாகும். ஜெயலலிதா நாட்டியத்திற்கு நான் தலைமை வகிப்பது அதிசயமானது அல்ல, புதிய நிகழ்ச்சியும் அல்ல. ஆனால் கிருபானந்த வாரியார் இந்த நிகழ்ச்சியில் என்னுடன் கலந்து கொண்டதுதான் பலருக்கு அதிசய நிகழ்ச்சியாக இருக்கும். அவர் பல நல்ல காரியங்களைச் செய்து இருக்கிறார். அவர் எங்கெல்லாம் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுகிறாரோ அங்கெல்லாம் நான் இருக்க விரும்புகிறேன். அவர்மீது எனக்குத் தனிப்பட்ட பற்றும், மரியாதையும் ஏற்படுகிறது.

சமீபத்தில் நெய்வேலியில் கிருபானந்தவாரியார் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி அவரே இனி எதுவும் பேச வேண்டாமென்று சொல்லி விட்டார். என்றாலும் அது பற்றி நான் இங்கு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தச் சம்பவம் குறித்துத் தி. மு. க.வினர் பட்ட வேதனைக்கு அளவேயில்லை. பல தி. மு. க. நண்பர்கள் மனம் வருந்தி எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

உண்மையில் தி. மு. க. காரர்கள்தான் வாரியாரை அந்தத் தொல்லையிலிருந்து காக்க அரும்பாடுபட்டவர்கள். ஆனால் தி. மு. க. வினர்மீது மாசுபடுத்த வேண்டும்; களங்கம் கற்பிக்கவேண்டும்; இதன்மூலம் அரசியல் லாபம் பெறவேண்டுமென்ற குறுகிய நோக்கத்தோடு சிலர் இருக்கிறார்கள்.

வாரியாருக்கும், தி. மு. க.வினருக்கும் சில கொள்கைகளில் உடன்பாடு உண்டு. வாரியார் ஒருவரே தெய்வம் என்று வணங்குகிறார். அண்ணாவும் ஒரே குலம் ஒருவனே தேவன் என்று சொன்னார்.

இந்த நாட்டில் யாரும் அனாதையாக இருக்கக் கூடாது; ஜாதி, மதம் ஒழிய வேண்டும்; கல்வி, பண்பாடு, பகுத்தறிவு வளர வேண்டுமென்று அண்ணா சொன்னார். அதையேதான் வாரியாரும் சொல்கிறார்.

இத்தகைய ஒருமித்த கருத்துக்களைக் கொண்ட வாரியார், தி. மு. கழகத்தைச் சேர்ந்தவராகவே என் கண்களுக்குத் தெரிகிறார். ஆனால் அவர் ஒரு கடவுளைக் குறிப்பிட்டு அதிக நம்பிக்கைவைத்து நடக்கிறார்.

அதைத் தவறு என்று நாங்கள் சொல்லவில்லை. ஒவ்வொருவரும் அவரவர் வழியிவ் சூழ்நிலைக்கேற்ப இருக்கிறார்கள். கடவுளை வைத்து வியாபாரம் செய்யவேண்டாம் என்றுதான் சொல்லுகிறோம்.

எவருமே பிறக்கும்போது அனாதையாகப் பிறக்கவில்லை. சந்தர்ப்பமும், சூழ்நிலையும்தான் அந்த நிலைக்குக்கொண்டுவந்து விட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தால் நான்கூட அனாதைதான்.

இரண்டரை வயதில் தந்தையை இழந்தேன்; இன்று தாயை இழந்திருக்கிறேன். அவரவர் உழைப்பிற்கும், ஊக்கத்திற்கும் ஏற்ப வாழ்க்கை முறை அமைகின்றன.



நான் அதிகம் சம்பாதிக்கிறேன். அதில் தேவைக்கு அதிகமாக இருப்பதை நல்ல வழியில் மனச்சாட்சியின் படி செலவிடுகிறேன்.

யார் எந்த தொழில் செய்தாலும் அதன்மூலம் அடுத்தவருக்கு துணையாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் ஒருவருக்கு ஒருவர் எப்போதும் துணையாக இருக்கிறோம்.

அனாதைக் குழந்தைகள் சமூக கொடுமையால் அந்த நிலைமைக்கு ஆக்கப்பட்டு இருக்கிறார்கள். எல்லோரும் கட்டுப்பாடுடனும் மனஉறுதியுடனும் தோல்வியைக் கண்டு துவண்டுவிடாமல் இது நமக்கு ஒத்துவராது வேண்டாம் என்று ஒதுக்கி தள்ளிவிட்டு அவரவர் நிலைமைக்கு ஏற்ப வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டால் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இந்த நாட்டிய நாடகம் மூலம் நல்ல கருத்தைப் பெறலாம். கெட்ட கருத்தையும் பெறலாம். பணத்துக்காக சிலர் வேறு வழியின்றி சில காரியங்களை செய்யவேண்டியிருக்கும்.

அதை வைத்து நல்லவற்றை விட்டு கெட்டவற்றை எடுத்துக் கொள்ளக் கூடாது. நாட்டில் கட்சி வேறுபாடு கருத்து வேறுபாடு இருந்தாலும் ஜனநாயகப் பண்பு மாறுதவகையில் நடக்கவேண்டும் தற்போது தமிழ்நாடு நல்ல பாதையில் முன்னேறி வருகிறது.

தன் திருப்பராய்துறைக்கு எம். ஜி. ஆர். போனார். அங்கு இராமகிருஷ்ண குடிலின் ஒவ்வொரு பகுதியாக எம். ஜி. ஆர். சுற்றிப்பார்த்ததார்.

ஆசிரியர்கள் ஊழியர்களுக்காக கட்டப்படும் குடியிருப்புப் பகுதிக்கு எம். ஜி. ஆர் அடிக்கல் நாட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எது நல்லது எது தீயது என்று ஒருவன் அறிந்துவிட்டால் அதுவே ஞானமாகிவிடாது. அதனாலேயே முத்தியடைய முடியாது, புதுமையடைந்தவன் அதனாலேயே ஞானியாகிவிட்டான்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருடம் மாசிமாதம் 2-ந் திகதி
(15-3-59)


## வகுப்பு வாதம்

வகுப்புவாதம்' என்ற தலைப்புடனே நமது ஆங்கில சக வர்த்தமானியான 'டெயிலி நியூஸ்' பத்திரிகை தமிழ்நாட்டிலே தலை தூக்கும் வகுப்பு வாதத்தைக் கண்டித்து நல்லதோர் தலையங்கம்எழுதியுள்ளது. அங்கு மலையாளிகளுக்கு மாறாக வகுப்புவாதக் கிளர்ச்சி நடப்பதாயும் தமிழ்நாடு அரசாங்கம் அங்கு கேரள துவேஷக் கிளர்ச்சியை உடன் உறுதியுடன் அடக்காவிடில் பெரிய வகுப்புவாத ஆபத்து ஏற்பட்டு விடுமென்றும் எச்சரிக்கை செய்கிறது. இவ்விதம் தமிழ்கத்து அரசியலில் 'டெயிலிநியூஸ்' விசேஷ அக்கறைகாட்டுவது வரவேற்கத் தக்கதக்கும்.

அண்ணாதுரையவர்கள் மறைந்ததும்தமிழகத்திலே திராவிடமுன்னேற்றக்கழகத்தின் சட்டசபைக் கட்சித் தலைவராக திரு. கருணாநிதி ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டதும் அதே பத்திரிகை ஓர் அச்சம் தெரிவித்தது. திரு, நெடுஞ்செழியன் அதிக நிதானமானவரென்றும் அவருக்குப் பதில் திரு. கருணாநிதி தமிழ் நாட்டின் முதலமைச்சராக வருவதால் தமிழ் நாட்டுக்கு மட்டுமன்றி இலங்கைக்கும் கூட' ஆபத்து ஏற்படுமென்று அஞ்சியது, நல்லவேளையாக தமிழ்நாட்டு முதல்வர்இலங்கை தி. மு க. வுக்கும்தங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லையென்று பகிரங்கமாக உறுதி மொழி அளித்தார் இதனால்இங்கு சில வட்டாரங்களில் நிலவிய பீதி 'டெயிலி நியூஸ்' கூறுவதுபோல ஓரளவு அடங்க உதவியிருக்க வேண்டும்.

ஆனால் இதே சமயம் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற கோஷங்கள் கிளம்பி தமிழகத்தில் வசிக்கும் மலையாளிகளுக்கு மாறாக துவேஷப்பிரசாரம் நடைபெறுவதை முதல்வர் கருணாநிதியே கண்டித்துள்ளார். 'நாம் தமிழர்' இயக்கத்தின் மூலகர்த்தாவும் தமிழக அமைச்சரவையில் மந்திரியாகியுள்ளவருமான திரு...

கள்ளத் தோணியாக இங்கு வந்து இலங்கைமீது படையெடுப்பரோ என்று பீதிகள் கிளப்பப்பட்டன. அங்கு தி. மு. க. ஆட்சி ஏற்பட்டதும், இந்தப் பீதி பொதுவாகச் சிங்களவரிடையே அதிகரித்து இருக்குமாயின் அதில் வியப்பில்லை. இராணுவபலம் டில்லியிலுள்ள தலைமை அரசிடமே இருப்பதால், மேற்குறித்த பீதிக்கு உண்மையில் ஆதாரமெதுவுமில்லை. என்றாலும், அண்டையிலுள்ள தமிழ் நாட்டுக்கும், ஈழத்துக்கும் இடையில் சந்தேகங்களோ, பீதிகளோ இல்லாமல், நல்லுறவு நிலவவேண்டியது பல விதங்களிலும் அவசியமாகும்.

இந்தநல்லுறவுக்கு,இருபகுதித் தலைவர்களும் அடிக்கடி சந்தித்து, மனம்விட்டுப் பேசி சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதுடன், பரஸ்பர உதவியாக வாழ புதிய ஏற்பாடுகள் செய்துகொண்டால் இருபகுதிப் பொதுமக்களுக்கும் எவ்வளவோ நன்மை பயக்கும் தமிழ் நாட்டிலிருந்து தி. மு. க. தலைவர்கள் இங்கு வந்து, இலங்கை அரசாங்கத்துடன் இதுபற்றிப் பேச இருப்பதாக ஒரு சென்னைச் செய்தி தெரிவிக்கின்றது. உண்மையாயின், அவ்வித கோஷ்டியை இலங்கைவரவேற்று எல்லாக் கட்சியினருடனும் கலந்து பேசி, பீதிகளைத்தீர்க்க ஒழுங்குசெய்யலாம். இதே சமயம், இலங்கைப் பிரதமர் உள்ளிட்டு பல கட்சித் தலைவர்களும், தமிழகத்துக்குச் சென்று நேரில் கலந்து பேசுவதும் தப்பெண்ணங்களை நீக்கப்பெரிதும் உதவுவதுடன், இதனால் பல நன்மைகளும் விளையும்.

இங்கு மிகச்செல்வாக்குப் பெற்றுள்ள "டெயிலி நியூஸ்" இதற்கான யோசனைகளைக்கூறி ஆதரிக்குமா? இதே சமயம் இலங்கையிலும் தமிழருக்கு மாறான வகுப்புவாதப் பேச்சுகளும் கிளர்ச்சிகளும் நடப்...

செனட்சபையில்

# "வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடில் விளைவுகள் மோசமாகும்"

நமது நிருபர்
பெரி. சுந்தரலிங்கம்

15-ம் திகதியிலிருந்து நாடெங்கும் அமுலாகவிருக்கும் மின்சார வெட்டு செனட்சபையைப் பொறுத்தவரையில் 13-ம் திகதியே பாதித்துவிட்டது!

சபை கூட்டப்பட்டதும் நீதியமைச்சர் திரு. ஏ. எப், விஜயமானே எழுந்து மின்சாரம் வரும்வரைக்கும் சபையை - சில மணித்தியாலங்களுக்காவது அல்லது பிறிதொரு நாளுக்காவது ஒத்திப்போடும்படி சபைத் தலைவர் திரு. ஏ. ரட்ணயகாவைக் கேட்டதும் மின்சாரம் வரும்வரைக்கும் தொடர்ந்து கூட்டத்தை நடத்திக்கொண்டிருப்போமோ செனட்டர்கள் யாருக்காவது ஆட்சேபம் உண்டா?" என்று கேட்டு, எதிர்க்கட்சிச் செனட்டர்கள் பக்கம் திரும்பினார்.

### மொழிபெயர்ப்பு வேண்டும்

செனட்டர் எஸ். நடராஜா: "மொழிபெயர்ப்பு இருக்கவேண்டும்!"

செனட்டர் எம். திருச்செல்வம்: "மொழிபெயர்ப்பு இல்லாவிட்டால் எங்களால் சபை நடவடிக்கைகளை பின்பற்ற முடியாது?

தலைவர் செனட்டர் ரட்ணயகா: "எல்லாருமே ஆங்கிலத்தில் பேசினால்"

(சிரிப்பு

செனட்டர் எம். திருச்செல்வம்: என்னைப் பொறுத்தவரை பரவாயில்லை; ஆனால் ஏனைய செனட்டர்களைப் பற்றி......

செனட்டர் டொரிக் டிசூடா: "மின்சார வெட்டை சாட்டாக வைத்து ஆங்கிலத்திலேயே சபை நடவடிக்கைகளை நடத்தும் வழக்கத்தை ஏற்படுத்திவிடக்கூடாது என அஞ்சுகிறேன்".

திமை இந்தத் திருத்த மசோதா அழித்துவிடுகின்றது என்பது தான் திரு. திருச்செல்வத்தின் குற்றச்சாட்டு.

அதைத்தான், "வாக்குறுதிகளை முறிப்பதில் பெயர்போன அரசாங்கம்" என்று இந்த அரசாங்கம் பெயர் வாங்காது, "வாக்குறுதிகளை எந்த ஒரு கட்சிக்குக் கொடுத்தாலும் பொதுமக்களுக்குகொடுத்தாலும்அதனை காப்பாற்றவேண்டி பொறுப்பு--"நல்ல அரசாங்கத்திற்கு, பொறுப்பான அரசாங்கத்திற்கு இருக்கவேண்டும்" என்று சொன்னார் செனட்டர்-- முன்னாள் அமைச்சர்-- திரு. திருச்செல்வம்.

"இந்த நாட்டின் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குத் தேசிய ஒற்றுமை பற்றி வானளாவப் பேசித்திரியும் அமைச்சர்களைக் கொண்ட அரசாங்கத்தினால் இழைக்கப்படும் அநீதிகளைப் பற்றி ஒத்திவைப்புப் பிரேரணையின்போது குமுறியெழுந்த செனட்டர் எஸ். நடராஜா மூன்று விடயங்களை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

### நடராஜாவின் குற்றச்சாட்டுகள்

1. கொழும்பு நூதனப் பொருட்காட்சிச்சாலை அதிபரால் வெளியிடப்பட்ட ஒரு துண்டுப்பிரசுரம் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே இருக்கிறது. தமிழில் இல்லை.

2. 54 சதவிகிதத்திற்கும் அதிகமான தமிழ்பேசும் மக்கள் வாழுகின்ற கொழும்பு போன்ற பகுதிகளில் பிறப்பு இறப்பு, திருமணப் பதிவாளர்கள் தமிழ்மொழி தெரியாதவர்களாக --தமிழ்ப் பெயர்கள் புரியாதவர்களாக இருப்பதால், பிறப்பு

காதுவிட்டால் நாட்டின் முன்னேற்றத்தைப் பெரிதும் பாதிக்கும் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்" என்று எச்சரித்துவிட்டு, அரசாங்கம் இந்த எச்சரிக்கையைச் செவிமடுத்துத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளாவிட்டால், 'இந்த நாட்டிலே தமிழ் பேசும் மக்களும் பெருமளவு வாழ்கிறார்கள் என்பதைச் சிங்கள மக்களுக்குத் தெளிவாக உணர்த்தக்கூடிய வழிவகைகளைத் தமிழ் பேசும் மக்கள் தெரிந்தெடுப்பார்கள்' என்றுகூறி போர்க்கொடியைத் தூக்கிப்பிடித்தார் செனட்டர் எஸ். நடராசா.

### நீதியமைச்சர் அளித்த பதில்

செனட்டர் நடராசாவின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த நீதியமைச்சர் திரு. விஜயமானே செனட்டர்கள் பிரச்சினைகளைக் கிளப்புமுன் சில மணித்தியாலங்களுக்கு முன்பாகவாவது அறிவித்தல் கொடுத்தால் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் தொடர்புகொண்டு தகவல்கள் சேகரித்து பதிலளிக்க வாய்ப்பளிக்கும் என்று கூறிவிட்டு செனட்டர் நடராசா அப்படி முன்னறிவித்தல் கொடுக்காததினால், நூதனப் பொருட்காட்சிச்சாலை அதிபர் தமிழிலும் அந்தப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளாரா? இல்லையா என்று திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள இயலவில்லை என்று பதிலளித்து முதல் விஷயத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டார்.

பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவாளர்கள்மாகாணரீதியாக அந்தந்த மாகாணங்களில் பெரும் பான்மையாகப் பேசப்படும் மொழியைப் பின்னணியாகக் கொண்டுதான் நியமிக்கப்

## செனட்டர் நடராசா போர்க்கொடி

இப்படியாக விவாதிக்கப்பட்டபின், பிற்பகல் 3-30 மணிவரை சபை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் சபை கூடிய போது, ராஜாங்கஅமைச்சரின் அனுமதியுடன் இலங்கை உல்லாசப்பிரயாணச் சபையால் ஆக்கப்பட்ட சில சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்டன. இதைத்...

இறப்பு திருமணப் பதிவுகளிலே பாரதூரமான பல பிழைகள் நடைபெறுகின்றன. உதாரணம்: ஸ்ரீகாந்தா என்ற பெயர் ஸ்ரீசாந்தா என்று பதியப்பட்டுள்ளது.

3. தமிழ்மக்களே பெரும்பான்மையாக வாழுகின்ற வடக்கு கிழக்கு மாகாணங்களிலே போலீஸாருக்குக் கொடுக்கப்படும் வாக்கு மூலங்கள் தமிழில் பதிவு...

படுவதால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழில் காரியமாற்றும் பதிவாளர்கள் இப்பகுதியில் வாழும் சிங்களவர்களின் பெயர்களையும் தமிழிலே தான் பதிகிறார்கள். அப்படியானால் பாரபட்சம் காட்டப்படுவதாக சிங்களவர்கள் குறை கூறலாமே?' என்று செனேட்டர் நடராசாவின் குற்றச்சாட்டைத்...

## செய்திச் சுருக்கம்

### வேலைநிறுத்தம்

களனி வெள்ளி.

களனியிலுள்ள டயர் கூட்டுஸ்தாபனத்தில் கடமையாற்றும் ஊழியர்களில் 200 பேர் இம்மாதம் 8-ம் திகதியிலிருந்து தங்களது எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

0 0 0

### தமிழ்ப் படங்கள் கட்டுப்படுத்தப்படும்

பம்பலப்பிட்டி, வெள்ளி

இலங்கையில் சிங்களத் திரைப்படத் தொழிலை முன்னேற்றுவதற்காக மிக விரைவில் தமிழ்ப் படங்களின் வெளியீடு கட்டுப்படுத்தப் படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. இனிமேல் தமிழ்ப் படங்கள் வெளியிடப்படும்போது அவை இலங்கை முழுவதிலும் மூன்றே மூன்று தியேட்டர்களில் மட்டுமே ஒரே காலத்தில் காண்பிக்கப்பட வேண்டுமென அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த முடிவினால் சிங்களப் படங்களுக்குத் தியேட்டர்களில் வசதி கிடைக்குமெனக் கருதப்படுகிறது.

0 0 0

### பொலிஸார் கண்டுபிடித்தனர்

மட்டக்களப்பு வெள்ளி

மட்டக்களப்பில் நடைபெற்ற பல திருட்டுகளுக்குக் காரணமாகவிருந்த திருட்டுக் கோஷ்டியொன்றை அண்மையில் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். மட்டக்களப்பின் பல பாகங்களிலும் நடைபெற்ற களவுகளுக்கு இக் கோஷ்டியே காரணமெனவும் இதைப் பிடிக்கப் பொலிஸார் ஒரு முயற்சி செய்தனர் எனவும் தெரிகிறது.

0 0 0

### புதிய பஸ்கள்

வறக்காப்பொலை வெள்ளி

வறக்காப்பொலை புதிய பஸ் நிலையத்தில் ஒவ்வொரு நாளும் திரண்டு நிற்கும் பிர...

## ஐயாறன் எழுதுவது

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் இம்முறை பங்குனி உற்சவம் நடத்தாமல் ஒரு மாதகாலத்துக்குப் பூட்டி வைப்பதென்று முடிவு செய்ய வேண்டி நேரிட்டுள்ளது வருந்தத்தக்கதாகும்.

இந்தத் தீர்மானத்துக்கு வந்தவர்களுக்கு இதுபற்றி அதிக மனவருத்தம் இருக்குமென்பதில் ஐயமில்லை. ஆலயத்தைத் திறந்து வைத்து, உற்சவம் நடத்தி ஆலயப் பிரவேச விஷயமாக கிளர்ச்சிகளும், பலாத்கார சம்பவங்களும் ஏற்பட அனுமதிப்பதைவிட, கோவிலை மூடிவிடுவதே மேலாகுமென்று அந்த அம்மனே அவர்களுக்கு அறிவுறுத்தி இருக்க வேண்டும். ஏனெனில் எல்லாம் அவள் செயல் தானே.

இந்த ஒருமாத காலத்தில் அங்குள்ள நன் மக்கள் இதைப்பற்றி நன்கு நிதானமாக யோசித்து, மனம் மாற வேண்டுமென்றுதான் கருணையே வடிவான அந்த அம்மன் இவ்விதம் செய்து கொண்டதோ தெரியவில்லை.

0 0 0

ஓர் ஊருக்குப் பெருமை அங்குள்ள கோவில்தான். அதிலும் தமிழர்களின் பெருமை அவர்களின் கோவில்களுல்தான் தங்கியுள்ளதென்பதற்கு தமிழ் நாடு அரசாங்கமே கோவில் கோபுரத்தை தனது அதிகார முத்திரையில் பொறித்துள்ளது தக்க அத்தாட்சியாகும்.

மேலும் தமிழருககு ஒரு தனிப்பண்புண்டு. கோவிலுக்கென்றால் எதையும் கொடுக்கத் தயாராக இருப்பர். கோவில் விஷயத்தில் தமிழ் மக்கள் இவ்வளவு முக்கியம் காட்டுவதற்குக் காரணம் என்ன? மனிதனின் உயிர் நிலையம் இதயத்திலே இருப்பது போல், ஓர் ஊரின் உயிர்நிலையம் கோவிலேயாகும்.

அது ஊர் மக்களுக்கெல்லாம் பொது உடமை. ஊர் ஒற்றுமையாக நல்வாழ்வு வாழச் செய்வதற்குக் கோவில்களே பெரிதும் உதவி வந்தன. நாட்டிலே அரசுகள் மாறும். ஆனால் கோவில்களோ அதிலுள்ள கடவுளரோ என்றும் மாற மாட்டார்கள். ஆகவே கோவிலின் பெயரால், அதனுள்ள மூர்த்தியின் பெயரால் மக்கள் தங்களிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்த்துக் கொள்ள முடிந்தது. ஆனால் அதே கோவில் காரணமாக மக்களிடையே புதிய சச்சரவுகள் ஏற்படுவதாயின் அது எவ்வளவு விபரீதம்! தமிழரைப் பார்த்து மற்றவர்கள் எள்ளி நகையாடுகிறார்களே! அம்மா! எங்களுக்கு நீதான் நல்ல புத்தி தந்து எங்களை அன்பால் ஒற்றுமைப்படுத்த வேண்டும். எங்கள் தவறுகளை மன்னித்து எங்களுக்குப் புதுவாழ்வு தர வேண்டும்.

0 0 0

கல்யாணத்திலே அழக்கூடாதென்பார்கள். ஆனால் 'பீட்டில்' என்ற பிரபல பாடகர்களில் அதிகப் புகழ் பெற்ற பால் மக்கார்ட்னி (26) என்பவர் லண்டனில் ஒரு பதிவுக் கந்தோரில் லிண்டா என்ற அமெரிக்கப் பெண்ணை (27?) மணந்து கொண்டபோது ஏராளமான கன்னிப் பெண்கள் கூடி, தேம்பித்தேம்பி அழுதார்களாம்! விவாக தம்பதிகள் சென்ற பின்பும் அங்கிருந்து ஒரு கோஷ்டியினர் ஒப்பாரி வைத்தார்களாம்! மணப் பெண்ணுக்கு முதல் விவாகமூலம் 6 வயது பெண் குழந்தையுமுண்டு.

ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஒரு கணவரை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று மேற்கத்திய பெண்களிடையே கருத்து நிலவுகிறதா. பாவம் குழந்தைகள்!

0 0 0

நாளும் நம்முடைநாட்கள்
அறிகிலோம்
ஆளும் நோய்களோ ரைம்
பத்தோடாறெட்டும்
ஏழைமைப் பட்டிருந்து
நீர் நையாதே
தோளிலி அரன் பாதமே
கூறுமே.

— அப்பர் அடிகள்

## ஒரு நாளைக்கு ஓடியபஸ் 9 நாளுக்கு காணமுடியாது
### புத்தளம் பிரயாணிகள் கஷ்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கோஷங்கள் கிளம்பி தமிழகத்தில் வசிக்கும் மலையாளிகளுக்கு மாறாக துவேஷப்பிரசாரம் நடைபெறுவதை முதல்வர் கருணாநிதியே கண்டித்துள்ளார். 'நாம் தமிழர்' இயக்கத்தின் மூலகர்த்தாவும் தமிழக அமைச்சரவையில் மந்திரியாகியுள்ளவருமான திரு. எஸ்.பி. ஆதித்தனும் தி.மு.க.விலுள்ள சில தீவிரவாதிகளும்தான் இதற்குக் காரணமென்றும் மலையாளத்துடன் நெருங்கிய சம்பந்தமுள்ளவரும் தி.மு.க, பிரபல தலைவர்களில் ஒருவருமான எம். ஜி. ஆர். அவர்களுக்கும் இது கவலையளித்திருப்பதாகவும் அப் பத்திரிகை சுட்டிக்காட்டி வகுப்புவாதத்தைக் கண்டித்துள்ளது.

தமிழ் நாட்டில் காங்கிரஸ் ஆட்சி நடந்தபோதே தமிழர்களும் விளையும்.

இங்கு மிகச்செல்வாக்குப் பெற்றுள்ள "டெயிலி நியூஸ்" இதற்கான யோசனைகளைக்கூறி ஆதரிக்குமா? இதே சமயம் இலங்கையிலும் தமிழருக்கு மாறான வகுப்புவாதப் பேச்சுகளும் கிளர்ச்சிகளும் நடப்பதைப்பற்றி அதேபத்திரிகை பொதுவாக மௌனம் சாதிப்பதுடன், சில சமயம் அதற்கு தூபமும் போடுவதாக தமிழரிடையே பொதுவாகப் பெரிய குறையுண்டு. அண்டை நாட்டிலே வகுப்புவாதம் கூடாதென்று உபதேசிப்பவர்கள், முதலில் இங்கு வகுப்புவாதம் கிளம்பாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏதிலார் குற்றம் போல் தம்குற்றம்காணில் தீதுண்டோ மன்னுமுயிர்க்கு?"

## மகத்தான சாதனை

"அப்போலோ-9" அண்ட வெளியிலே மூவர் பத்து நாட்களில் 40 லட்சம் மைல்களுக்கு மேல் சுற்றி, பூமிக்குக் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்துக்குத் திரும்பிவிட்டது. அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் கூறுவதுபோல் சரித்திரத்தில் பதியத்தக்க பெரிய சாதனையாகும். இத்துடன் அண்டவெளிப் போட்டியிலே ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் சமநிலை ஏற்பட்டுள்ளதுடன் மட்டுமல்லாமல், ரஷ்யாவைவிட, அமெரிக்காவே முதல்முதல் சந்திரனை மனிதனை இறக்கக் கூடியவாய்ப்பு அதிகமேற்பட்டுள்ளது.

இந்த யாத்திரைக்கு 34 கோடி டாலர், அதாவது 200 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகியிருப்பதாகத் தெரிகிறது.

உலக மக்கள் அனைவருக்கும்இதனால் பெருநன்மை ஏற்படவிருப்பதாக ஜனாதிபதி நிக்ஸன் தெரிவிக்கிறார். எப்படி, எப்போது என்பது விளக்கப்படவில்லை. உலக மக்களில் பெரும்பாலோருக்கு உணவு, உடை, குடியிருப்புப் பற்றி எவ்வளவோ குறைகளுண்டு. அமெரிக்காவிலேயே பலர் சத்து உணவில்லாமல் சங்கடப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இங்கு பூமண்டலத்திலுள்ள மக்களின் இவ்வித அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்வதில், அமெரிக்கா முதல் கவனம் செலுத்தினால், உலக மக்களின் நன்றிக்கு அது பாத்திரமாகும்.

ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இந்த வான வெளிப் போட்டியில் சமநிலை ஏற்பட்டுவிட்டதால் இனி இரு வல்லரசுகளும் அதிகம் ஒத்துழைக்கமுடியாதா? அப்படி ஒத்துழைப்பின், செலவுகள் மிச்சமாகி, அந்தப் பணம் உலக மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த அதிகம் பயன்படுவதுடன், உலக சமாதானமும் பலப்படக்கூடும்.

## பொருள்கள் பறிமுதல் ரூ. 1000 அபராதம்

நல்லூர், சனி

ரூ. 10 ஆயிரம் பெறுமதியான கூறைச்சேலை, காஷ்மீர் சேலை, பருத்திச்சேலை, பட்டு சேலை, பட்டு வேஷ்டி சால்வைகள் ஆகியவற்றை நற்று யாழ்ப்பாண நகரிலுள்ள கடையொன்றிலிருந்து சுங்கப் பகுதியினர் கைப்பற்றினர்.

கடத்தல் பொருள்களான இவற்றை ஜி. கே. ராஜசூரியர் தலைமையில் சென்ற கோஷ்டி கைப்பற்றி சுங்கப் பகுதி கலெக்டர் திரு. எஸ். ஓம். ஜே. சேனரத்னவிடம் எப்படைத்தபோது இப் பொருள்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு ரூபா 1000 அபராதம் விதிக்கப்பட்டது.

மாக ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் சபை கூடிய போது, ராஜாங்கஅமைச்சரின் அனுமதியுடன் இலங்கை உல்லாசப்பிரயாணச் சபையால் ஆக்கப்பட்ட சில சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து வருமானவரிச் சட்ட (திருத்த) மசோதா விவாதத் திற்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

### டொரிக் டி சூசா கண்டனம்

நிதிகள், வரிகள் சம்பந்தமான மசோதாக்களில் செனட்சபை எந்தவிதமான திருத்தங்களையும்செய்ய அரசியல் சட்டம் இடமளிக்காததாலோ என்னவோ செனட்டர் டொரிக் டி சூசா சில நிமிடங்களும் செனட்டர் எம். திருச்செல்வம் சில நிமிடங்களும் பேசியபின் மசோதா நிறைவேற்றப்பட்டுவிட்டது.

செனட்டர் டொரிக் டி சூசா தனது பேச்சில், தொழில்நுட்ப அறிஞர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் போன்ற தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கு வருடமொன்றுக்கு 3000 ரூபா வரையில் தொழில் சம்பந்தப்பட்ட நூல்கள், வெளிநாட்டு சஞ்சிகைகள் வாங்க வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்ததை அரசாங்கம் இந்த சட்டதிருத்தத்தின்மூலம் நிறுத்திவிட முயற்சிப்பது முற்றாகப் பிடிக்கவில்லை.

இதைத் தவிர," கடைசிக கட்டத்தை அடைந்து கொண்டிருக்கும் அரசாங்கத்தைப் பற்றி," எதுவும் கூற செனட்டர் டொரிக் விரும்பவில்லை.

இவரைத் தொடர்ந்து பேசிய செனட்டர் திருச்செல்வத்துக்கோ, அரசாங்கம் கொடுக்கும் வாக்குறுதிகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டு விடுவதாகத்தான் பட்டது. ஆனால் தன் மனதுக்குப் பட்டதை அப்பட்டமாகச் சொல்லாமல் ஏதேதோ என்ற ரீதியில் பூசிமெழுகிவிட்டார் செனட்டர் திருச்செல்வம்.

### திருச்செல்வம் குற்றச்சாட்டு

அரசாங்கத்தின் கடன் பத்திரங்களில் முதலீடுசெய்தவர்களுக்கு வரி விலக்களிக்கப்படுமென அரசாங்கம் ஏற்கனவே கொடுத்திருந்த உறுதிமொழி ...

றன. உதாரணம்: ஸ்ரீகாந்தா என்ற பெயர் ஸ்ரீசாந்தா என்று பதியப்பட்டுள்ளது.

3. தமிழ்மக்களே பெரும்பான்மையாக வாழுகின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே போலீஸாருக்குக் கொடுக்கப்படும் வாக்குமூலங்கள் தமிழில் பதிவு செய்யப்படுவதில்லை.

--இந்த மூன்று விஷயங்களையும் சுட்டிக்காட்டிய செனட்டர் எஸ். நடராஜா முதல் விஷயமாக நூதனப் பொருட்காட்சி அதிபரின் துண்டுப் பிரசுரத்தையும் சபையில் சமர்ப்பித்து "ஒரு குறிப்பிட்ட அமைச்சினால், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளில் இதுவும் ஒன்று" என்று கல்வியமைச்சரையும் சூசகமாகத் தாக்கிவிட்டு, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டதைத் தான், பேச விரும்பவில்லை" என்று சொல்லிவிட்டு, 'கடுமையான வார்த்தைகளை நான் உபயோகிக்க விரும்பவில்லை' என்றும் கூறிவிட்டு, மேற்படி பிரசுரத்தைக் காட்டி, 'இந்த நிகழ்ச்சிகளிலெல்லாம் இந்த நாட்டின் நாளைய பிரஜைகள்- தமிழ்க் குழந்தைகள் கலந்துகொள்ளக்கூடாது என்பதுதான் ஆட்சியாளரின் எண்ணமா?' என்று ஆணித்தரமாகக் கேட்டுவிட்டு. ஏன் இந்தப் பாரபட்சமான நடவடிக்கை எடுக்கப்பட்டது? எப்படி எடுக்கப்பட்டது? யாரால் எடுக்கப்பட்டது! என்பதை அறிவதோடு, 'இந்த நாட்டின் ஒரு பகுதி மக்களை உதாசீனப்படுத்தும் அதிகாரிகளுக்கு எதிராக ஆட்சியாளர் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்,

வடக்கு. கிழக்கு மாகாணங்களில் பொலிசாருக்கு முதன் முதலில் கொடுக்கப்படும் முக்கியமான வாக்குமூலங்கள் தமிழில் பதியப்படாமல் சிங்களத்தில் பதியப்படுவதால் அம்மாகாணங்களிலே நீதியை நிலைநாட்டுவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகச் சொல்லிவிட்டு இறுதியாக.

### போர்க்கொடி தூக்கினர்

"அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சிபீடத்தில் ஏறுமுன் தமிழ்பேசும் மக்களின் ஆதரவைப்பெறுவதற்காகக் கொடுத்த வாக்குறுதிகளை உடன் நிறைவேற்றிவைக்...

ஈழநாடு பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கள் இப்பகுதியில் வாழும் சிங்களவர்களின் பெயர்களையும் தமிழிலே தான் பதிகிறார்கள். அப்படியானால் பாரபட்சம் காட்டப்படுவதாக சிங்களவர்களும் குறை கூறலாமே?' என்று செனேட்டர் நடராசாவின் குற்றச்சாட்டைத் திசைதிருப்பி விட்டார்.

பாரபட்சத்தைப் பற்றி இதுவரைகாலமும் பேசாது அவர்களுடனே இரண்டறக் கலந்து செயலாற்றிய தமிழரசுக் கட்சியினர் இன்று எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துகொண்டு அவர்களையே கண்டிப்பது நீதியமைச்சருக்கு சற்று சங்கடமாக இருந்திருக்கவேண்டும்.

### நடைமுறை சிக்கல்கள்

இல்லாவிட்டால் போலிஸ் வாக்குமூலங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்லாது நாட்டின் எல்லாப் பகுதிகளும் வாக்குமூலம் கொடுக்கப்படும் மொழியிலேயே பதியப்பட வேண்டும். அதுதான் சிறந்தமுறை என்பதை நான் கொள்கையளவிலே ஏற்றுக்கொண்டாலும் நடைமுறையில் பல சிக்கல்கள் இருப்பது எங்களுடன் இந்த அரசாங்கத்தில் இருந்தவர்களுக்கே தெரியாதா? என்று சொல்லி, இல்லை இல்லை நான் இப்பொழுது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவில்லை' என்று செனட்டர் திருச்செல்வம் பதறி பதிலளிக்கவேண்டிய சூழ்நிலையை உருவாக்கியிருக்க மாட்டார்.

தேசிய அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக பாரபட்சம் எதுவும் காட்டப்படவில்லை என்பதை மிகவும் வலியுறுத்திப் பதிலளித்தார் திரு. விஜயமான்ன.

### இடமாற்றத்துக்கு ஆட்சேபம்

சங்கானை, வெள்ளி

சங்கானை பட்டினசபை எல்லைக்குள்பட்ட சகல வட்டாரப் பொதுமக்களுக்கும் வசதியாகமல்லாகம், காரை நகர்வீதிச் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள சங்கானைப் பட்டினசபை ஆயுர்வேத வைத்தியசாலை ஏப்ரல் மாதம் 1-ம் திகதி தொடக்கம் பட்டினசபைக் காரியாலயத்திற்கு அருகாமையிலுள்ள ஒதுக்குப்புறத்திற்கு இடமாற்றம்செய்யப்படவுள்ளது. இவ்விடம் பெயர்தலை எதிர்த்து பொதுமக்கள் சங்கானைப் பட்டினசபைத் தலைவருக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

முயற்சி செய்தனர் எனவும் தெரிகிறது.

0 0 0

### புதிய பஸ்கள்

வறக்காப்பொலை வெள்ளி

வறக்காப்பொலை புதிய பஸ் நிலையத்தில் ஒவ்வொரு நாளும் திரண்டு நிற்கும் பிரயாணிகளின் நன்மை கருதி அவர்களின் வசதிக்காக விரைவில் புதிய பஸ்கள் அரசாங்கத்தால் அனுப்பப்படவிருக்கின்றன.

0 0 0

### புதிய திட்டம்

பம்பலப்பிட்டி வெள்ளி

வியாபாரிகள் பலர் கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளிடம் குறைந்த விலையில் நெல்லைக் கொள்பனவு செய்கின்றனவாம். இவ்வாறு குறைந்த விலையில்நெல்வாங்குவதைத் தடுப்பதற்காக விவசாய சேவையாணையாளர் புதிய திட்டமொன்றை வகுத்துள்ளார். இத்திட்டத்தின்படி குடியேற்றத் திட்டங்களுக்கும், கிராமங்களுக்கும் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் வாகனங்கள் மூலம் சென்று கட்டுப்பாட்டு விலைக்கு நெல்லை வாங்குவார்கள்.

## தலைமை ஆசிரியர் இல்லை! பாடசாலை

யாழ்ப்பாணம், சனி

கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்குக் கடந்த ஒரு வருட காலமாகத் தலைமையாசிரியர் இல்லையென்றும், உடனடியாகத் தலைமையாசிரியர் ஒருவரை நியமிக்குமாறும் மேற்படி கல்லூரி பெற்றோர் ஆசிரிய சங்கத்தினர் வடபகுதி வித்தியாதிபதியைக் கேட்டுள்ளனர்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்களில் பெரும்பான்மையினோர் சைவசமயத்தவர்களாயிருக்கின்ற போதிலும் இங்குள்ள 5 ஆசிரியர்களில் மூவர் கிறிஸ்தவர்களாக இருக்கின்றார்களென்றும், எனவே ஒரு சைவத் தலைமையாசிரியரையே நியமிக்கவேண்டுமெனவும் ஆங்கில ஆசிரியர் ஒருவரும் இங்கு நியமிக்கப்பட வேண்டுமெனவும் இந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின்பிரதி உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கல்லூரிக்குத் தேவையான விஞ்ஞான கூடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளிலும் பெற்றோர் ஆசிரிய சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

(கா. நி.)

## ஒரு நாளைக்கு ஓடியபஸ் 9 நாளுக்கு காணமுடியாது
### புத்தளம் பிரயாணிகள் கஷ்டம்

புத்தளம், வெள்ளி

அதிகமாக புத்தளம் இருந்து செல்லும் பஸ் எல்லாம் சீர்கேடான முறையில்இயங்குகின்றன. ஒரு நாளைக்கு ஓடி வண்டியை ஒன்பது நாளுயக்குக் காணமுடியாது.

பிரதானமாக கல்லடி கற்பிட்டி பஸ்கள் கல்லடியில் இலங்கையின் இரண்டாவது சீமெந்துத் தொழிற்சாலைக்குரிய வேலைகள் நடைபெறுகின்றன.

அட்டவில்லு குடியேற்றக் காணியில் உள்ளோர்போக்குவரத்து செய்ய இருக்கின்றனர். இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் இப்பகுதிக்கு ஒழுங்கான சேவையை இயக்காததினால் மக்கள் கஷ்டப்படுகின்றனர்.

காலை 6-15 க்கு பஸ்செல்வது வழக்கம்இதில் காரியாலயங்களுக்கு செல்பவர்கள் நேரத்துக்கு இலகுவில்போகக்கூடியதாக இருந்தது. இப்போது இது இயங்குவதாகத் தெரியவில்லை.

இப்பகுதி பிரயாணிகள் பஸ்களுக்காக ஓட்டமும் நடையுமாக கூட்டம் கூட்டமாகச் செல்லும் காட்சி மிகவும் பரிதாபமாக இருக்கின்றது.

## 22 மாவட்டங்களுக்கு அமைச்சர் விடுக்கும் செய்தி

அளவெட்டி, வெள்ளி

உள்ளூராட்சி அமைச்சர் இம் மாதம் 22-ம் திகதி காலை 7-15-க்கு வானொலியில் நவீன பாலம் சம்பந்தமாக விடுக்கும் செய்தி 22 மாவட்டங்களிலும் ஒரு நிகச்ழ்சியாக அமைய இருக்கிறது.

இச்செய்தி 22 மாவட்டங்களிலும் அமைக்கப்படும் நவீன பாலங்களின் ஆரம்ப விழாவில் முக்கிய நிகழ்ச்சியாக வானொலி மூலம் ஒலிபரப்ப ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

22 மாவட்டத்திலும் அமையும் பாலங்களை அந்தந்த தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்கள் திறந்து வைப்பர்

22மாவட்டங்களிலும் நிகழும் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு:-

காலை 7-00 மணி அந்த தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினரையும், மற்றும் பிரமுகர்களையும் வரவேற்றல் 7-05க்கு தேசிய கொடி ஏற்றல், 7-10 க்கு சமயகீதம். 7-15க்கு உள்ளூராட்சி அமைச்சரின் வானொலிச் செய்தி ஒலிபரப்பப்படும். 7-30 மணிக்கு பகிரங்க கூட்டம் நடைபெறும். 9-15க்கு பாலம் சம்பிரதாய முறைப்படி திறந்துவைக்கப்படும்.

இதை அடுத்து கலைநிகழ்சிகளும், மரதன் ஓட்டபோட்டிகளும், சைக்கிள் ஓட்ட போட்டிகளும் நடத்தப்படும்.

### இடமாற்ற

புதுக்குடியிருப்பு, வெள்ளி

வவனியா மாவட்டத்தை சேர்ந்த புதுக்குடியிருப்பு ஸி.ஸி. தமிழ்க்கலவன் பாடசாலையில் கடமையாற்றிய திரு. கே. நல்லையா ஆசிரியர் இம்மாதம்7-ம் திகதிதொடக்கம் வவனியா இராசேந்திரம் அ. த. க. பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றார்.

### தீவினை வெல்ல வழி

உடுப்பிட்டி, வெள்ளி

"மனித சமுதாயம் தோன்றியது உலக இன்பத்தில் சுகித்திருக்க அல்ல. இறைவன் நாமம் தொழுவதின் மூலம் வாழ்க்கை சிறக்கும். அனைவரும்துன்மார்க்கத்தை விட்டு அன்புவழியில் ஈடுபடவேண்டும். எவரும் எவருக்கும் துரோகம் செய்யக்கூடாது. ஆசை, அழுக்காறு முதலியவற்றை அகற்றி வாழ்வதே சுபீட்சவாழ்வுக்கு வழி.

நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் சேவைசெய்யவேண்டும். ஆசையே அழிவுக்குக் காரணம். ஆசையில் பல உயிர்கள் வீணாகப் பலியாகின்றன. மனத்தைக்கட்டுப்படுத்துவதின் மூலம் தீவினையை வெல்லலாம்."

தமிழகத்தைச் சேர்ந்த முருகபக்தர் திரு. பித்துக்குளி முருகதாஸ் வதிரிபூவற்கரைப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற பஜனையில் பேசுகையில் கூறினார்.

திரு. முருகதாஸின் பஜனை சுமார் மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org